
# 3.காதல் கண்மணி



அகிலா கோவிந்த்



26573

இனிய முடிவு கொண்ட
இனிமையான நாவல்

# காதல் கண்மணி



1

''ஐயோ.. சரியான மக்கு.. நீ! நடந்த நாடகம் எல்லாம் உனக்குத்தான்!'' என தங்கை சித்ரா ஆணித்தரமாய் சொன்னதும் ஆடித்தான் போய்விட்டாள் கவிதா.

மை விழிகள் அகல விரிய, ''என்ன சித்ரா சொல்கிறாய்?'' என்றாள் நம்ப முடியாதவளாய்.

நீ.. நீ.. மனோகரனைக் காதலிக்கிறாய் அல்லவா?

காது மடல்கள் அதிர பேசி அவளை மேலும் அதிர வைத்த சித்ரா கைகளைக் கட்டிக் கொண்டு அவளை நெருங்கினாள்.

''சித்ரா.. நீ.. எப்படி..? உனக்கெப்படி தெரியும்?'' என்றாள் கவிதா முற்றிலும் திகைத்தவளாய்.



''எனக்குத் தெரியும். நானே உன்னிடம் கேட்கலாம் என்று இருந்தேன். அதற்குள் அப்பா முந்திக் கொண்டார்..''

''அப்பாவுக்கு எப்படி..?''

''யாரும் சொல்லவில்லை. நேற்று மாலை மைசூர் கபே ரெஸ்ட்டாரண்டில் உன்னை மனோகரனுடன் பார்த்திருக்கிறார், போதுமா?''

தயங்கியவளின் வாயை முழுவதுமாய் அடைத்து விட்டாள் சித்ரா. அதற்கு மேல் கவிதாவால் ஒன்றும் பேச முடியவில்லை.

அவள் மனோகரனைக் காதலிக்கும் விஷயம் வீடு முழுக்கத் தெரிந்து விட்டது. வெட்ட வெளிச்சமாகி விட்டது. இனி என்ன நடக்குமோ?

உதடுகளை அழுந்த கடித்தவளுக்கு மனோகரின் மீது கோபம் கோபமாய் வந்தது. இந்த மனோகரிடம் எவ்வளவு கெஞ்சினாள்? இந்த ரெஸ்ட்டாரண்டெல்லாம் வேண்டாம். யாரும் பார்த்து விடுவார்கள் என்றால் அவன் கேட்டால் தானே?

ஒருகணம் முகம் சிவந்து போனவள் தங்கை உலுக்குவதைக் கண்டு உணர்வுக்கு வந்தாள்.

''என்ன யோசிக்கிறாய்? அப்பா ஏன் பட்டென உன்னிடம் விஷயத்தை உடைத்துக் கேட்கவில்லை என்றுதானே?''

''அ.. ஆ.. ஆமாம்..''

''அதற்கும் காரணமிருக்கிறது..''

''காரணமா?''

புரியாமல் பார்த்தவளை நோக்கி சித்ரா கண் சிமிட்டினாள்.

"உனக்கு அப்பா அடிக்கடி சொல்வாரே ஒரு பீர்பால் கதை ஞாபகமில்லை?"

கவிதா யோசித்தாள். பேரரசர் அக்பரின் மந்திரி பீர்பால் பற்றி அப்பா ஒரு கதை சொல்வதுண்டு. மந்திரி பீர்பாலிடம் ஒரு அழகிய தங்க நிற பொம்மை இருந்ததாம். அதை பீர்பால் எப்போதும் தன் கையிலே வைத்திருப்பாராம். பேரரசர் அக்பருக்கு அந்த சிறு பொம்மையின் மீது ஒரு கண். பீர்பால் அறியா வண்ணம் அதை ஒருநாள் எடுத்து தனக்காக வைத்துக் கொண்டாராம். தன்னிடமுள்ள பொம்மையை அபகரித்திருப்பது அக்பர் என்பதை உணர்ந்து கொண்ட பீர்பாலும் இதை எப்படி அக்பரிடம் கேட்பது என தவித்தாராம்.

பிறகு சமயோசிதமாய் சிந்தித்து ஒவ்வொரு நாளும் அக்பர் முன்னிலையில் தனது பணியாள் ஒருவனைக் கூப்பிட்டு பொம்மையை அவன் திருடி விட்டதாய் குற்றஞ் சாட்டி கடுமையான வார்த்தைகளால் திட்டுவாராம். இப்படியே தினமும் அக்பர் முன்னிலையில் இந்தப் பணியாளர் திட்டுதல் தொடர.. பொறுக்க முடியாமல் அக்பரே ஒருநாள் தன் தவறை உணர்ந்து பீர்பாலிடம் மன்னிப்புக் கேட்டாராம்...

ஆக.. அப்படி அந்தக் கதையில் பீர்பால் நாசூக்காய் உணர்த்தியது போல் அப்பா சித்ரா மூலம் தனக்கு காதல் தவறு என உணர்த்துகிறாரா?

ஒரு கணம் மாலை நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஞாபகப்படுத்திப் பார்த்த கவிதாவுக்கு வியப்பாகத்தான் இருந்தது.

மாலை கல்லூரி முடிந்து அவள் வீட்டை நெருங்க நெருங்க.. வித்தியாசமாகத்தான் உணர்ந்தாள் அவள்.



இன்னமும் ஒரு தரம் கூட தங்கை சித்ரா எட்டிப் பார்க்க வில்லை. இதற்கு முன் வீட்டின் வலதுகோடி சிறு ஜன்னல் வழியாய் நொடிக்கொருதரம் திறந்து அக்கா வருகிறாளா? வருகிறாளா? என்று பார்த்துக் கொண்டிருப்பவள் இன்று பார்க்கக் காணோம், என்னாயிற்று சித்ராவுக்கு?

பொதுவாக கவிதா வருகிற நேரம் அப்பாவும் இரு மகள் களும் மட்டும் வாழுகிற அந்த சிறு வீட்டில் ஆவலோடு எதிர்பார்க்கப்படுகிற நேரம்.

பள்ளிக் கதைகளை மிஸ் மார்களின் சுவாரஸ்ய நடவடிக் கைகளை சொல்ல சித்ராவுக்கு அக்கா வேண்டும். ஆசிரியர் பணி முடிந்து திரும்பியிருக்கும் தந்தை தில்லைநாதருக்கும் பொழுது போக பேச்சுத் துணைக்கு மூத்த மகள் கவிதா வேண்டும்.

வீட்டின் மேல் மாடி சின்ன பால்கனியில் மூவரும் அமர்ந்து, காபியை மெல்ல மெல்ல அருந்தியவாறு பேசிக் கொண்டி ருந்தது மூவருக்கும் பிடித்தமான விஷயம்.

தாயற்ற தனது குழந்தைகளை அரவணைக்கும் பாங்கில் பழைய நிகழ்ச்சிகளை தான் கேள்விப்பட்ட கதைகளை சுவாரஸ்யமாக சொல்வார்... தில்லைநாதர். அதை மெய்மறந்து இருவரும் கேட்டுக் கொண்டிருப்பர்.

ஆனால் இன்று..? அப்படி ஏதும் நிகழவில்லையே!

வீட்டினுள் நுழைந்தபோது குற்றவாளிக் கூண்டில் நிற்பது போல் மலங்க மலங்க விழித்தபடி சித்ரா நின்று கொண்டி ருந்தாள்.

எதிரே.. கோபமாய் கண்கள் சிவப்பேறிய தில்லைநாதர்!



uploaded by Naghu

தந்தை இவ்வளவு கோபம் கொண்டிருப்பதை அன்றுதான் முதல் முறையாய் கவிதா கண்டித்தாள்.

என்னப்பா விஷயம்? என கவிதா பதறியவளிடம் தில்லை நாதர் விஷயத்தை விளக்கினர்.

சித்ராவை விடலைப் பையன் ஒருவன் இளித்து இளித்து சுற்றி வந்தானாம். திடீரென ஒருநாள் லவ் லெட்டர் ஒன்றை நீட்டி விட்டானாம். இவளும் மறுக்காமல் அதை வாங்கிக் கொண்டு என்னிடம் கொண்டு வந்து நீட்டுகிறாள். அதனால் தான் இவளிடம், உனக்கு புத்தி எங்கு போயிற்று? அந்த லெட்டரை கிழித்து அவன் முகத்திலேயே வீசியிருக்க வேண்டாம்? என கண்டித்துக் கொண்டிருக்கிறேன்...

தந்தை சொல்ல அதற்கு ஏற்றாற் போல் சித்ராவும் தயங்கித் தயங்கி விழித்துக் கொண்டிருந்தாள். தில்லைநாதர் சும்மாவே சிறு விஷயத்திற்கே டென்ஷனாகுகிறவர். இதற்கு விடுவாரா? ஒரு சின்ன ஆர்ப்பாட்டம் பண்ணி விட்டுத்தான் அடங்கினார். கவிதாவிற்கு அவரை சமாதானம் செய்வதற்குள் போதும் போதுமென்றாயிற்று.

அப்போது கூட கவிதாவிற்கு கொஞ்சமும் உரைக்க வில்லை. தானும் ஒருவனை காதலிக்கிறோம் என்ற உணர்வு வரவில்லை.

ஆனால் இப்போது..?

இப்போது புரிகிறதா? தங்கை சித்ரா மறுபடி உலுக்கியது நினைவுக்கு வந்தாள்.

புரிகிறது...

"உன்னிடம் வெளிப்படையாய் கேட்டு எங்கே நீ எதிர்த்து விட்டால்.. ஆமாம் நான் மனோகரனைக் காதலிக்கிறேன்

uploaded by Naghu



அதற்கென்ன என்று நிமிர்ந்து விட்டால்? அதற்காகத்தான் நாசூக்காய், என் மூலமாய் கண்டித்து வெளிப்படுத்தி இருக்கிறார்..

கவிதாவால் மேற்கொண்டு ஒன்றும் பேச முடியவில்லை. அழகு விழிகள் கீழ் நோக்கி வெறிக்க அப்படியே குனிந் திருந்தாள்.

தன்னை விட இரண்டு வயது சிறியவள் சித்ரா. அவளை வைத்து நாடகம் போட்டு புத்தி சொல்லும் அளவுக்கு.. நாம் தரம் தாழ்ந்து போய் விட்டாலா?

அவள் மனநிலையை சித்ரா அறிந்தாளோ.. என்னமோ.. வேகமாய் அவளை நெருங்கி அவளது கரங்களோடு கோர்த்து அழுத்தினாள்.

கவிதா கவலை தோய்ந்த முகத்துடன் தங்கையை இறுக அணைத்துக் கொண்டாள்.

"என்னை மன்னித்து விடு சித்ரா, என்னால்தானே உனக்கு திட்டு?"

மேலும் கலங்கப் போனவளை சித்ரா சட்டென உலுக்கி ஆறுதல் படுத்தியவள், "ச்சு.. அதை விடு. இப்போது நீ என்ன நினைத்திருக்கிறாய்? அதைச் சொல்.." என்றாள் அதட்டும் குரலில்.

கவிதா உதடுகளை ஆசுசையாய் சுழித்தாள்.

"வேறென்ன காதலை விட்டு விடப் போகிறேன், மனோகரனை மறந்துவிடப் போகிறேன்.."

"சரியான முட்டாள் நீ!"

சித்ரா கண்களை விரித்து முறைத்துச் சொன்னதைக் கண்டு கவிதா அதிரத்தான் செய்தாள்.

''என்ன சொல்கிறாய் சித்ரா?''

''அப்பாவுக்குப் பயந்து காதலை தியாகம் பண்ண போகிறாயாக்கும். நல்ல பெண்.. நீ!''

''சித்ரா..''

''பிறகென்னக்கா... அவர் உலகத்தில் நடக்காத தப்பையா நீ செய்து விட்டாய்? காலம் எப்படி கம்ப்யூட்டர், இன்டர்நெட் என முன்னேறி விட்டது. இன்னமும் கட்டுப் பெட்டித்தனமாய் காதல் தவறு காதலிப்பது பாவம் என்று சொல்லிக் கொண்டிருந்தால்... அது எவ்வளவு பெரிய பத்தாம் பசலித்தனம்..?''

''அப்படியானால் நீ..!''

''பேசாமல் மனோகரனை காதலி. அவனையே கல்யாணம் பண்ணிக் கொள் என்கிறேன்..''

''சித்ரா நிஜமாகத்தான் சொல்கிறாயா?''

''நிஜமாகத்தான் சொல்கிறேன். நான் சொல்வதை உன்னால் நம்ப முடியவில்லையா? வேண்டுமென்றால் தலையில் கை வைத்து சத்தியம் செய்யட்டுமா?''

சொல்லியபடி சித்ரா அவளது நீண்ட கூந்தலழகில் கையை வைத்து அழுத்திய போதுதான் அவள் எவ்வளவு ஆணித்தரமாய் பேசிக் கொண்டிருக்கிறாள் என்பது கவிதாவுக்கு உரைத்தது.

''அப்படியானால் அப்பா..?''



''அவர் கிடக்கிறார்... பழைய கால தமிழாசிரியர்! அப்படித்தான் சொல்வார்... அதையெல்லாம் பார்த்தால் ஒன்றும் ஆகாது..!''

தந்தையை சித்ரா தனக்காகச் சிறுமைப்படுத்திப் பேசுவது கண்ட கவிதா துடித்தாள். கூடவே விட்டேற்றியாய் பேசும் அவள் மனநிலையை கண்டு அதிரவும் செய்தாள்.

ஆனால் சித்ரா விடுகிற பாடில்லை.

''அக்கா, எதற்கும் கொஞ்சம் துணிச்சல் வேண்டும். முதலில் ஒரு விஷயத்தை தெளிவாய் தெரிந்து கொள். நீ ஒன்றும் பெரிய தப்பை செய்து விடவில்லை. ஒருவரை, உன் மனதுக்கு பிடித்தவரை காதலிக்கிறாய். யாரையோ முன்பின் தெரியாதவரை மணந்து வாழ்க்கையை சந்திப்பதை விட மனதுக்குப் பிடித்தவரை மணந்து வாழ்க்கையை இனிமையாய் தொடங்குவதில் தவறென்ன இருக்கிறது? பார்க்கப் போனால் அதுதானே நியாயம்? கொஞ்சம் நன்றாய் யோசித்துப்பார்!''

விட்டால்.. சித்ரா தனக்காக காதல் பட்டிமன்றமே நடத்தி விடுவாள் போலிருந்தது.

''ஆமாம் இவளுக்கென்ன இப்படிக் கோபம்!''

தன்னுடைய காதலுக்கு இவள் ஏன் இவ்வளவு அக்கறை இவ்வளவு தீவிரம் காட்டுகிறாள், ஒருவேளை.. இவள்.. யாரையேனும்.. காதலிக்கிறாளா?''

சட்டென அந்தக் கேள்வி துணுக்குற தாக்க கவிதா நிமிர்ந்தாள்.

''சித்ரா..''

"சித்ரா, மெய்யாகச் சொல்லு. நீ... யாரையேனும்.. காதலிக்கிறாயா?"

சித்ரா பதில் சொல்லவில்லை. கிளுகிளுவெனச் சிரிக்க ஆரம்பித்தாள்.

"சிரிக்காதே, சித்ரா, பதிலைச் சொல்லு.."

சித்ரா சிரிப்பை நிறுத்தினாள்.

"நான் நிஜமாய் யாரையும் காதலிக்கவில்லை. ஆனால்.."

ஒருகணம் நிறுத்திவிட்டு, "கண்டிப்பாய் காதலித்துதான் திருமணம் செய்வேன்.." என அழுத்தமாய் முடிக்கவும் செய்தாள் சித்ரா.



## 2

அன்று இரவு கவிதாவால் நிம்மதியாய் தூங்க முடியவில்லை.

ஒரே நாளில் என்னவெல்லாம் நடந்து விட்டது.

அவளது காதல் வெட்ட வெளிச்சமாகி விட்டது.

மனோகரனை காதலிப்பது எல்லோருக்கும் தெரிந்து விட்டது.

அப்பா எதையும் தீவிரமாய் யோசிக்கிறவர். சிந்தித்து முடிவெடுக்கிறவர். அவள் விஷயத்திலும் கொஞ்சமும் அவள்



மனம் நோகாது நாசுக்காய், காதல் தவறு விட்டு விடு...?! என உணர்த்துகிறார், தங்கை மூலம் சொல்லாமல் சொல்லிவிட்டார்.

அவரது எண்ணம் நியாயம்தானே? செல்ல மகளை ரெஸ்ட்டாரண்டில் அன்னியன் ஒருவனுடன் சிரித்து சிரித்து பேசுவதைப் பார்த்தால்.. அவருக்கு எப்படி இருந்திருக்கும்..?

முதல் முதலாய் கல்லூரி படிப்பைத் தொடங்கிய அன்று அவர் கவிதாவை மெனக்கென்று தனியே அழைத்துச் சொன்னது அவளது ஞாபகத்தில் ஓடியது.

"இதோ பாரம்மா... நீ போவது கோஎஜுகேஷன் காலேஜ். கல்லூரி மாணவர்களைப் பற்றி உனக்குத் தெரியாதா? பழுத்த மரம்தான், கல்லடி பெறும் என்று சொல்வார்களே... அதுபோல பூத்துக் குலுங்கும் உன் தங்க நிற அழகு நிறைய பேர் கண்களை உறுத்தும். நீ தான் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். புரிகிறதா?"

தந்தை சொன்னபோது பூம் பூம் மாடு போல் தலையாட்டத்தான் செய்தாள்.

ஆனால் இப்போது..!

தெரிந்தே.. இரண்டு கண்களையும் நன்றாக திறந்து வைத்துக் கொண்டே.. காதல் சகதியில் குதித்து விட்டாளே..!

ஒரு கணம் சதா பரபரத்து நொய் நொய்யென அவள் நச்சரிக்கும் மனோகரனை நினைத்து எரிச்சலாகவும் இருந்தது.

மனோகரன் ஒன்றும் பெரிய மன்மதன் இல்லை.

எதைப் பார்த்து அவனிடம் மயங்கினாள்...? எதைக் கண்டு அவனை காதலித்தாள்?

எப்படி இந்த காதல் சிறையில் விழுந்தாள்?

நிறைய கேள்விகள்... திரும்பவும் அவளைக் குடைந்தன.

சிந்தித்தபோது... கல்லூரியின் கலை விழா நிகழ்ச்சிதான் அவளுக்கு ஞாபகம் வந்தது.

சரியாக மூன்று மாதங்களுக்கு முன்பு அது நடந்தது.

அவர்களது இரண்டாம் இளங்கலை ஆங்கில இலக்கியம் சார்பாய் நடந்த நாடக விழா!

அந்த நாடக விழாவில் ஷேக்ஸ்பியரின் ரோமியோ ஜூலியட் நாடகத்தை நடத்துவதாய் தீர்மானிக்கப்பட்டது.

நாடகப் பொறுப்பேற்றிருந்த டல்ஸி மிஸ் வகுப்புக்கு வந்து நாடகத்திற்காக ஆட்களை தேர்வு செய்ய ஆரம்பித்தாள். அப்படி அவள் ஜூலியட் பாத்திரத்தில் நடிப்பதற்காகத் தேர்வு செய்தது கவிதாவைத்தான்!

''கவிதா, நீ தான் ஜூலியட் பாத்திரத்திற்கு பொருத்த மானவள். உனது மாசுமருவற்ற இயற்கை அழகு, பளீரிடும் பால் வெண்மை முகம், நளினமான உடலமைப்பு சந்தேகமே இல்லை. நீதான் அந்த ஜூலியட்!'' என்று அத்தனை மாணவிகள் முன்பும் தன்னை உயர்வாய் விளித்துச் சொன்னபோது... முகம் சிவந்துதான் போனாள் கவிதா.

ஆனாலும் உள்ளூர அவளுக்கு தவிப்பு. இந்த நாடகம், மேடைப் பேச்சு போன்ற ஸ்டேஜ் அனுபவங்களை அவள் ஒருபோதும் விரும்பியதில்லை.

ரஸித்துக் கேட்பதோடு சரி.

தனது தாயகத்தை வெளிப்படுத்தியபோது டல்ஸி மிஸ் ஒரு பிடி பிடித்து விட்டாள்.



''என்ன கவிதா, நீ பேசுவது? இது காலேஜின் இன்னர் காம்படிஷன் அல்ல. மொத்த கல்லூரிகளும் போட்டி போட்டு பங்கேற்கும் நாடக விழா. எப்படியும் நாம் பரிசைத் தட்டியாக வேண்டும். போன முறையே பரிசை தவற விட்டு விட்டோம். இம் முறையாவது அந்த கல்சுரல் அகாடமி விருதை வாங்கி விட வேண்டும்! அப்படி நாம் வாங்கி கல்லூரிக்குக் கொடுத் தால்தான் நமக்கும் பெருமை... நமது கல்லூரிக்கும் பெருமை புரிகிறதா?'' டல்ஸி மிஸ் அடித்த நீண்ட லெக்சர் அவளை ஊமையாக்கிற்று. வேறு வழியில்லாது பலியாடு போல் தலையாட்டத்தான் செய்தாள் கவிதா.

அதற்கு அடுத்த நாள் முதல் நாடக விழாவுக்காக தினம் மாலை ரிகர்சலும், நடிப்பு ஒத்திகையும் நடக்க ஆரம்பித்து விட்டது.

ஷேக்ஸ்பியரின் பிரசித்தி பெற்ற 'ரோமியோ ஜூலியட்' நாடகத்தை விலாவாரியாக அவளுக்கு விளக்கினாள் டல்ஸி மிஸ்.

''வெரோனா நகரத்தில் எதிர் எதிர் துருவங்களாய் இரண்டு பகையான குடும்பங்களில் உதித்தவர்கள்தான் இந்த ரோமியோவும் ஜூலியட்டும்! இருவர் குடும்பத்திற்கும் தீராத பகை. ஆனால் பெரிய நிகழ்ச்சி ஒன்றில் ரோமியோவும் ஜூலி யட்டும்... சந்திக்கிறார்கள். இருவரும் அக்கணமே மனதை பறிகொடுக்கின்றனர். கண்டதும் காதல் ஏற்படுகிறது.

எத்தனையோ, எதிர்ப்புகளை மீறி அவர்களது காதல் வளர்கிறது. நண்பர்கள் துணை மூலம் ஜூலியட் ரோமியோ திருமணமும் நடைபெறுகிறது.

ஆனால் எதிர்பாராத விதமாய் கொலைப்பழி ஒன்றில் சிக்கி ரோமியோ ஜூலியட்டிடமிருந்து பிரிகிறான். அதேநேரம்

ஜூலியட்டிற்கு வீட்டில் இன்னொரு கல்யாணம் செய்யும் முயற்சி நடைபெறுகிறது. ரோமியோவின் நண்பர் ஒருவர் மூலம் கிடைத்த அந்த அதிசய மருந்தை ஜூலியட் குடிக்கிறாள்.

அந்த மருந்தைக் குடித்ததும் கீழே விழுந்து பிணம் போல் ஆகிவிடுகிறாள் ஜூலியட். அவள் உறவினர்கள் ஜூலியட் நிஜமாகவே செத்து விட்டதாய் கல்லறையில் அவளது உடலை வைத்து விடுகின்றனர். ரோமியோ வந்தவனும் தனது ஜூலியட் செத்து விட்டதாய் நம்பி மனமுடைகிறான். தற்கொலை செய்து கொள்கிறான். மருந்தின் மயக்கம் தீர்ந்து எழுந்த ஜூலியட் ரோமியோ செத்துக் கிடப்பதைப் பார்த்து தானும் உயிரை மாய்த்துக் கொள்வதோடு... கதை முடிகிறது.

அப்படி ஜூலியட் வேடத்திற்கு கவிதா செலக்ட் ஆன மாதிரி, ரோமியோ வேடத்திற்கு செலக்ட் ஆகியவன் இந்த மனோகரன்!

நெடுநெடுவென உயரத்துடன் சிவப்பாய் இருந்தவனை கவிதாவும், அப்போதுதான் பார்த்தாள். "கவிதா, இதுதான் மனோகர். தர்ட் இயர் எகனாமிக்ஸ், உன்னுடன் ரோமியோவாய் நடிக்கப் போகிறவர்.."

டல்ஸி மிஸ் மனோகரனை அறிமுகப்படுத்தியபோது வழக்கமான புன்முறுவலுடன் கைகூப்பிக் கொண்டாள்.

ஆனால் மனோகரன் அவளைக் காணாததைக் கண்டது போலத்தான் பார்த்தான்.

உதடுகளை விரித்து தன் அத்தனை பற்களையும் காட்டியவன் தன் வாழ்நாளில் இப்படி ஒரு பேரழகியைப் பார்த்ததில்லை என்பதைப் போல் அந்தக் கணமே பரவசமாகியும் விட்டான்.



அதற்குப் பின் கவிதாவிடமிருந்து அவன் கண்களை விலக்கவே இல்லை.

மனோகரனின் பார்வை தன்னையே அடிக்கடி வருடுவதைக் கவிதாவும் கவனிக்கத்தான் செய்தாள்.

அவன் தன்னை அடிக்கடி பார்க்கிறானோ என்ற சந்தேகத்தில் அவளும் மறுபடி மறுபடி பார்த்தாள்.

அந்த சமயத்தில் நாடகத்திற்கான ஒத்திகையும் தொடங்கியது.

முதல் காட்சி ரோமியோவும் ஜூலியட்டும் சந்தித்துக் கொள்ளும் அற்புதமான காட்சி.

பெரிய விழா ஒன்று நடக்கிறது. அவ்விழாவிற்கு ரோமியோ திருட்டுத்தனமாய் முகமூடி அணிந்து நுழைகிறான். அவனது அலைபாயும் கண்களில்... மின்னும் வைரமாய் பளிச்சென தெரிகிறாள் ஜூலியட்! இருவரது கருவிழிகளும் ஒருவரையொருவர் ஆழமாய்ச் சந்தித்துக் கொள்கின்றன.

அந்தப் பார்வையில்... அந்த நொடியில்.. இருவர் மனதிலும் சலனம். இனம் புரியா உணர்வு... இந்த நாடகக் காட்சியை அப்படியே ஒத்திகை பார்த்த மனோகரனும் கவிதாவும் தடுமாறத்தான் செய்தனர். இருவர் மனதிலும் அதேபோல சலனம்!

பார்வை...

இருவரும் ஒருவரையொருவர் பார்க்கும் பார்வை.. அதற்குத்தான் என்ன ஒரு சக்தி!

கவிதாவுக்கு திருக்குறளின் அந்த வரிகள் ஞாபகத்தில் ஓடியது.

"நோக்கினாள். நோக்கெதிர நோக்குதல் தாக்கணங்கு தானை கொண்டன்ன துடைத்து.."

அதாவது தலைவியைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். தலைவன் அதை கவனித்தாலும் ஜாடையாக வேறுபக்கம் திரும்பிக் கொண்டிருக்கிறான். அப்போது, தான் பாராமலே தலைவி தன்னைப் பார்க்கும் பார்வை தன்னை தாக்கி உடம்பே கொதித்து விட்டதாய் தலைவன் உணர்கிறான்.

சரி, நாமும் ஒரு பார்வை பார்ப்போமே என்று அந்தக் கணம் மனம் மாறி திரும்புகிறாள். தன்னையே உறுத்த தலைவியை எதிர் பார்வை கொள்கிறான். ஐயோ! என்ன இது? தலைவன் இதுவரை பார்க்காமல் இருந்தபோது அவள் மட்டும் வந்து தானே தாக்கினாள். ஆனால் இப்போது நேருக்கு நேர் பார்த்தபோது..? ஒரு பெரும் படையே வந்தல்லவா அவனைத் தாக்குகிறது? தாக்கி சடாரென காதல் தீயில் அவன் எழுந்து விட முடியாமல் தள்ளியல்லவா விடுகிறது?

இது வள்ளுவர் வர்ணித்த காதல் காட்சி. அதுபோன்றுதான் மனோகரனின் பார்வை விடாமல் தன்னை துரத்தி எதையோ உணர்த்துவதாய் கவிதா உணர்ந்தாள்.

அது போதாதென்று சக மாணவி ஒருவர் டல்ஸி மிஸ்ஸிடம், "மிஸ், கதைப்படி ரோமியோவும், ஜூலியட்டும் பார்வையாலே காதல் கொள்வதாய் சித்தரிக்கப்பட்டுள்ளதே... அப்படியானால் கண்டதும் காதல் என்றுதானே தெரிகிறது. இதை நாடகம் பார்ப்பவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?" என்று வினவவும் செய்தாள்.

அதற்கு டல்ஸி மிஸ் கொடுத்த விளக்கம் அவளை மட்டு மல்ல, கவிதாவையும் அப்படியே உலுக்குவாய் இருந்தது.



என்ன நினைத்து விட்டீர்கள்? காதலில் பார்வை ஒரு முக்கியமான அங்கம். இதை ஷேக்ஸ்பியர் மட்டுமல்ல, நம் சங்க கால இலக்கியங்களும் அப்படியே உணர்த்துகின்றன.

உதாரணமாய் கம்பர் காதல் பார்வையை பற்றி என்ன சொல்கிறார் தெரியுமா? கண்ணினை ஒன்றை ஒன்று கவ்வி, அவை உண்ணவும் நிலைபெறா..என்று! காதல் பார்வையின் சக்தி அத்தகையதாம்.

பார்வையாலே கண்கள் ஒன்றை ஒன்று கவ்விக் கொண்டு அப்படியே நிலை தடுமாற வைத்து விடுமாம். கம்பரை விடுங்கள், வள்ளுவர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம், காமத்தில் செம்பாகம் அன்றி பெரிது.. என அதாவது காதல் விளையாட்டில் கண் பார்வையில் கொள்ளும் களவே பெரும்பகுதிக் கதை என்கிறான் வள்ளுவன்.

கம்பனும், வள்ளுவனும் சொல்லியதைத்தான் இங்கு ஷேக்ஸ்பியரும் சொல்கிறார். அதனால், காதலில் பார்வைதான் பெரிது. முக்கியமான அங்கம்!" என தன் நீண்ட உரையை முடித்தாள் டல்ஸி மிஸ்.

சும்மாவே பார்வை பார்த்துக் கொண்டிருந்த மனோகரன் மிஸ்ஸின் இந்த விளக்கத்தைக் கேட்டு பார்வையின் சக்தியை கூட்டி கூட்டி விட்டான்.

கவிதாவிற்கும் என்னவோ போல்தான் இருந்தது. காதலைப் பற்றி அவள் கேட்ட விளக்கங்களும் நாடக பாதிப்பினால் ஏற்பட்ட காதல் சூழ்நிலையும் அவளது மனநிலையை பெரிதும் மாற்றியிருந்தது.

அதனாலே நாடக ஒத்திகையின் போது மனோகரன் மெல்ல அவளது மலர்க் கரங்களை பற்றி காதல் போதையில் தனது உதடுகளை குவித்து முத்தமிட்டபோது.. அவளுக்கு வழக்க மான கோபம் வரவில்லை. நிஜமான காதலன் போல் முத்தமிடுகிறானே என்ற ஆத்திரம் வரவில்லை.

சட்டென ஏற்பட்ட சூழ்நிலை மாற்றத்தில், அந்நிய ஸ்பரிசத்தில் அவளது உடம்பும் ஒத்துப் போயிற்று.

அதற்குப் பின் ஓரிரு முறை நாடக ஒத்திகையை சாக்காய் வைத்துக் கொண்டு யாருமில்லாத சமயமாய்ப் பார்த்து மனோகரன் அவளை லேசாக அணைக்கக் கூடச் செய்தான்.

எந்தவித மறுப்பும் இல்லை. உடம்பும் மனமும் அவனது செயலுக்கு எதிர்ப்புக் காட்டாத போது கவிதா அதை உணர்ந்தாள். தெரிந்தோ, தெரியாமலோ தானும் மனோகரனை காதலிக்க ஆரம்பித்து விட்டோம் என்று.



3

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் மனோகரனும் கவிதாவும் நடித்த ரோமியோ ஜூலியட் நாடகம் பெரும் வரவேற்பைப் பெற்று போட்டியில் கல்சுரல் அகாடமி விருதை தட்டிச் சென்றது.

கல்லூரி முழுக்க மனோகரனுக்கும் கவிதாவுக்கும் பாராட்டு மழை. ஆள் ஆளுக்குத் தேடிப் பிடித்து அவர்களைப் பாராட்டிய



தோடு இல்லாமல், நிஜமாகவே நீங்கள் பொருத்தமான, ரோமியோ ஜூலியட் ஜோடிதான்... என சர்டிபிகேட்டும் கொடுத்தார்கள்!

கவிதாவின் தோழிகளும் ஒரு படி மேலே போய் கவிதாவும் மனோகரும் ஒருவரையொருவர் காதலிப்பாய் செய்தியையும் பரப்பினார்கள். ஆக கல்லூரி முழுக்க மனோகரனும் கவிதாவும் காதலன் காதலி போன்ற பிரமையை உண்டாயிற்று.

தினம் வகுப்பு இடைவேளையின் போது மனோகர் அவளைத் தேடி வருவதும் கவிதா சிரிக்க சிரிக்க ஆவலோடு அவனுடன் பேசுவதும் வழக்கமாயிற்று. மனோகரன் பேச்சில் படு சமர்த்தன். கவிதாவுடன் பழகிய ஒரு சில நாட்களிலே அவளது விருப்பு வெறுப்புகளை நன்கு தெரிந்து கொண்டான். அதற்கேற்றாற் போல் தினம் சுவாரஸ்யமாய் எதுவும் விஷயத்தைக் கொண்டு வந்து அவளிடம் பேச ஆரம்பிப்பான். தனது அழகு பேச்சில் மைவிழிகள் படபடக்க கவிதா தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு புளகாங்கிதத் தில் திணறுவான்.

சந்தடி சாக்கில் பேசியபடியே அவளைப் புகழ்வான். நீலப் பூவிழி நிலத்தை நோக்க, கோலச் சிற்றிடை கொடிபோல் துவள, அப்படியும் இப்படியுமாய் கைகள் அசைய நீ வருகிற அழகு அப்படியே பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது கவிதா! என இலக்கிய பாணியிலே ஐஸ் வைப்பான்.

அப்படித்தான் ஒரு நாள் அவளைப் புகழ்ந்து கொண்டே மெல்ல அவளது சிறு இடையை அணைத்தவன் அப்படியே குனிந்து அவளது இதழ்களில் முத்தமிடவும் போனான்.

ஆனால் கவிதாவின் புலனறிவு விழித்து விட்டது. சட்டென சுதாரித்து அவனை விலக்கி தானும் விலகிக் கொண்டாள்.

அன்றிலிருந்து அவர்களது காதலுக்கு தொடாத வரைமுறை யையும் வலுக்கட்டாயமாய் உட்படுத்திக் கொண்டாள் கவிதா.

ஆயிற்று ஒரு வழியாய் நாடக ஒத்திகையில் பற்றிக் கொண்ட மனோகரனின் காதல் இன்று வீடு வரை தெரிந்து விசுவரூபம் எடுத்தாயிற்று.

என்ன செய்ய?

வெகு நேரம் தூங்காமல் அதையே சிந்தித்தாள் கவிதா.

தந்தை ஒருபோதும் அவள் மனோகரனை காதலிப்பதை அனுமதிக்கப் போவதில்லை. இப்போதே நாசுக்காய் காதலை விட்டு விடு. நான் அனுமதிக்க மாட்டேன்...! என சொல்லாமல் சொல்லி விட்டார்.

அப்படியானால் என்ன செய்ய?

காதலை விட்டு விடுவதா? மனோகரனை மறந்து விடுவதா?

தங்கை சித்ரா சொன்ன வாக்கியங்கள் தெளிவாய் உருப் பெற்று ஓடியது.

அக்கா, நீ உன் மனதுக்கு பிடித்தவரை காதலிக்கிறாய். யாரையோ முன்பின் தெரியாதவரை மணந்து வாழ்க்கையை தொடங்குவதை விட உன் மனதுக்கு பிடித்தவரை மணந்து வாழ்க்கையை இனிமையாய் தொடங்குவதில் தவறென்ன இருக்கிறது? அப்பாவை விடு! அவர் பழைய காலத்து ஆள், அவர் ஒருபோதும் உன்னுடைய காதலை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஏற்றுக் கொள்ளவும் அவரால் முடியாது..!

தங்கை சொல்வதும் புரியத்தான் செய்தது. ஆனாலும் கவிதாவால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ரொம்ப நேரம்



கண்கள் சிவக்க சிந்தித்தவள் கடைசியில் இதுபற்றி மனோகரிடம் பேசி ஒரு முடிவிற்கு வருவது என தீர்மானமும் எடுத்தாள்.



## 4

மறுநாள் மனோகரனிடம் விஷயத்தைச் சொன்னபோது அவன் கடகடவென ஹாஸ்யத்தைக் கேட்டது போல் சிரித்தான்.

புரியாமல் அவளை வியந்து பார்த்தாள் கவிதா.

''கவிதா இது நான் எதிர்பார்த்துதான்...!'' என அடக்க முடியாமல் மனோகரன் மேலும் சிரித்தவன், ''கவிதா நாம் நடித்தோமே ரோமியோ ஜூலியட் நாடகம்... ஞாபகமிருக் கிறதா! அதில் காதலர்களுக்கு எவ்வளவு சோதனைகள்? எத்தனை ஆபத்தான இடர்பாடுகள்?'' என கேட்கவும் செய்தான்.

அவனது கேள்வியின் அர்த்தம் புரியாமல் மருண்ட விழிகளோடு அவனே வெறித்தாள் கவிதா.

''புரியவில்லை? சோதனைகள்! இடர்ப்பாடுகள்! அது வந்தால்தான் காதலுக்கு சுவாரஸ்யம்! நம் காதல் ஜெயிக்கப் போவதற்கான அத்தாட்சி!'' என்றான் திரும்பவும் ரோமியோ வசனம் பேசியவனாய், கவிதா திரும்பவும் விழிக்கவே அதற்கும் விளக்கம் கொடுத்தான் மனோகரன்.

''காதலர்களுக்கு இதுபோன்ற சோதனைகள் வருவது வாடிக்கையாம். இப்படி சோதனைகளும் இடர்பாடுகளும் வந்தால்தான் ஒருவரையொருவர் தாங்கள் வைத்திருக்கும் அன்பைப் புரிந்து தங்களது காதலை பலப்படுத்திக் கொள்வார்களாம்.''

''அது இருக்கட்டும் மனோகர். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அப்பா காதலுக்கு ஒருபோதும் சம்மதிக்க மாட்டார். அவரை எதிர்க்கச் சொல்கிறீர்களா?''

மனோகர் பலமாய் மறுத்து தலையாட்டினான்.

''அப்படி இல்லை.. கவிதா..''

''பின் எப்படி?''

''உன் தந்தைக்கு புரிய வைப்போம். காதலின் சக்தி எத்தகையது என அவருக்கு உணர்த்துவோம்..''

மனோகரன் பேசுவது எத்தனையோ சினிமாப் படங்களில், கதைகளில் கேட்டு புளித்துப் போன விஷமாகவே கவிதாவுக்குத் தோன்றியது.

முதல் முறையாய் நாடக கால ரோமியோ போல் பேசும் அவனை ஒரு பயத்துடனே பார்த்தாள்.

''பயப்பட வேண்டாம் கவிதா, நம் காதல் ஜெயித்து விடும். அதற்கு ஒரு வழி இருக்கிறது'' - என்றான் மனோகர் கடைசியில்.

''என்ன வழி?''

''ஆனால்.. அதற்கு நீ சம்மதிக்க வேண்டும். என்னை முழுவதுமாய் நீ நம்ப வேண்டும்..''



பீடிகை போட்டான் மனோகர்.

புரியாமல் திரும்பவும் விழிக்க ஆரம்பித்தாள் கவிதா.

மனோகரே தொடர்ந்தான்.

''கவிதா, நாம் இந்த காதலன் காதலி ஸ்டேஜில் இருந்தால் தான் இந்த ஆபத்து எதிர்ப்பு எல்லாம். இந்த ஸ்டேஜை இந்தக் கட்டத்தை நாம் கடந்து விட வேண்டும். கடந்து விட்டால்..''

''புரியவில்லை மனோகர்..''

தலை சாய்த்து தன்னையே படபடக்க உற்றுப் பார்த்த கவிதாவின் தங்க நிற அழகை அந்த நேரத்தில் மனோகரன் ரசித்தவன் நிதானமாய் தன் திட்டத்தையும் விளக்கினான்.

அதன்படி இருவரும் காதலன் காதலி நிலையைக் கடந்து கணவன் மனைவியாக ஆகிவிட வேண்டுமாம். எங்காவது ஓரிடத்தில் நண்பர்களை சாட்சியாய் வைத்து தாலி கட்டி திருமணம் செய்து கொள்ள வேண்டுமாம்...

மனோகர் திட்டத்தை விவரிக்க.,.. விவரிக்க.,. ஆடித்தான் போய்விட்டாள் கவிதா.

யாருக்கும் தெரியாமல் கல்யாணமா?

திருட்டுத் தாலியா? அதுவும் கவிதாவா?

''என்ன மனோகர் சொல்கிறீர்கள்?''

வெகுண்டு சினந்தவளாய் உதடு துடிக்க கேட்டவளை மனோகரன் அமைதியாய்ப் பார்த்தான்.

''இதுதான் நம்மைப் போன்ற காதலர்களுக்கு காதல் சட்டத்தில் இருக்கும் ஒரே வழி. இதைத் தவிர வேறு ஒரு வழியும் இல்லை!''

கவிதாவால் அதைக் கொஞ்சமும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஆனால் மனோகரன் பிடிவாதம் பிடித்தான். வேறு வழியே இல்லை என்று சாதித்தான்.

எத்தனையோ உதாரணங்களைக் காட்டினான். கல்லூரியில் காதலித்து துணிந்து வீட்டை விட்டு எதிர்த்து திருமணம் செய்து கொண்டு இன்று சந்தோஷமாய் வாழும் காதல் ஜோடிகளின் பெயரை அடுக்கினான்.

அவள் மேலும் முடிவுக்கு வராமல் குழம்பவே, "இதோ பார் கவிதா, எந்த வீட்டில்தான் காதலிக்கிறேன் என்றதும் சந்தோஷமாய் பச்சைக்கொடி காட்டுவார்கள்? உடனே மனமகிழ்ந்து ஓ.கே சொல்வார்கள்? கொஞ்சம் நீயே சிந்தித்துப் பார்த்து பதில் சொல்.." என தத்துவம் பேசுவது போல் விளக்கவும் செய்தான்.

கவிதாவுக்கு அவனது கூற்று நியாயமானதாகவும் தோன்றியது.

எந்த வீட்டில்தான் காதலை ஒப்புக் கொள்வார்கள்?

எந்தப் பெற்றோர்கள் காதலை அனுமதிப்பார்கள்?

நூற்றில் ஒரு சதவீதம் அப்படி இருந்தால் அது ஆச்சரியமே!

காதல் கூடாது. அது ரொம்ப கெட்ட விஷயம்... போல் அல்லவா பெற்றோர்களின் மனதில் பதிந்து கிடக்கிறது!

மனோகரன் சொல்வது போல் எந்தச் சூழ்நிலையிலும் தந்தை அவர்களது காதலுக்கு ஒத்துக் கொள்ளப் போவதில்லை பச்சைக் கொடி காட்டப் போவதில்லை.

இதையெல்லாம் தெரிந்துதான் தங்கை சித்ரா அப்படிச் சொன்னாளோ?



'அப்பாவை விடு. இது உன் வாழ்க்கை. வாழப் போவது நீ. உன் மனதுக்குப் பிடித்தவரோடு நீ விரும்பியவரோடு வாழ்க்கையைத் தொடங்குவதில் என்ன தவறு?'

மேல் உதட்டின் மேலும் நெற்றியிலுமாய் பளபளக்கும் வியர்வையுடன், சிறு வேக மூச்சுக்களை விட்டவாறு விம்மித் தணியும் அவள் உடலழகை - மனோகரன் வெகுவாய் ரஸித்த வாறு அவள் தீவிரமாய் சிந்திப்பதை பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்தப் பளீரிடும் அழகு தனக்கு விரைவில் சொந்தமாகப் போகிறது என்கிற எண்ணம் குரங்காய் அவனைப் பிடித்து ஆட்டியது.

அவனை ரொம்பவும் சிந்திக்க விட்டால் ஆபத்து என்று நினைத்தவனாய், "ரொம்பவும் குழம்பாதே கவிதா, லேசாக சிந்தித்துப் பார். இலகுவாக எல்லாம் புரியும்..." என விளக்கமும் கொடுத்தான்.

கவிதா அன்று கடைசிவரை எந்த முடிவிற்கும் வராமல்தான் விடைபெற்று கிளம்பினாள். அவளது முடிவை தெரியும் ஆவலில் பரபரத்த மனோகரனிடம் "என் தங்கை சித்ராவிடம் ஒரு வார்த்தை பேசிவிட்டு முடிவைச் சொல்கிறேன்" என்றாள்.

'பொல்லாத தங்கை அவளிடம் போய் கேட்க வேண்டுமா?' மனோகரன் உள்ளுக்குள் குறுகுறுத்து புகைந்தாலும் அதைக் கொஞ்சமும் வெளிக்காட்டாது புன்னகைத்து தலையசைத்தான்.

"தாராளமாய் சிந்தித்து முடிவெடு. ஒன்றும் அவசரமில்லை" என்றான் தன் ஏமாற்றத்தை சிறிதும் காட்டாமல்.

கவிதா அதன்பின் வீட்டுக்கு வந்தபோதும் அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

விஷயம் மனதை போட்டு குடை குடையென்று குடைந்தது. எந்த ஒரு முடிவிற்கும் வர முடியாமல் அவளை தவிக்க வைத்தது.

தந்தை முன் அவளால் நிமிர்ந்து கூட நடமாட முடியவில்லை. அவரது கண்களைச் சந்திக்கவே அவளது விழிகள் அஞ்சின.

தில்லைநாதரும் அதன்பின் அவளிடம் ஒன்றும் கேட்டுக் கொள்ளவில்லை.

தங்கை சித்ரா மூலம் நாசூக்காய் உணர்த்தியது மூலம் கவிதாவிற்கு உரைத்திருக்கும். காதலை தந்தை விரும்பவில்லை என்பது புரிந்திருக்கும். தனக்காக இனி கவிதா காதலை விட்டு விடுவாள். பிரச்சினை தீர்ந்தது.. என விஷயத்தை சுளுவாய் எண்ணி விட்டார் போலும்!'

ஆனால்.. கவிதா?

அவளால் காதலை விட்டுவிட முடியவில்லை. அதேநேரம் தந்தையின் வார்த்தைகளை மீற முடியவில்லை.

இரண்டும் சரி பாதியாய் இருந்து அவளை முடிவெடுக்க முடியாமல் வாட்டியது.





## 5

அன்று இரவு தனிமையில் தவித்தவளைத் தேடி வந்தாள் சித்ரா.

கவிதாவின் அழகு முகம் வாடியிருப்பதைக் கண்டு விஷயத்தை நொடியில் கண்டுபிடித்தவளாய், ''என்னாயிற்று?'' என்றாள் அதீத அக்கறையுடன்.

உதடுகளை வெறுமையாய் பிதுக்கினாள் கவிதா.

''ஒன்றும் ஆகவில்லை..''

''ஒன்றும் ஆகவில்லையா?'' என்றபடி அதிசயப்பட்டு சித்ரா தலையை சிலுப்பியவள், ''அக்கா, நான் உன்னுடைய பிரச்சினை என்ன நிலைமையில் இருக்கிறது என கேட்டேன்..'' என்றாள் விளக்கம் கொடுத்தவளாய்.

''அப்படியேதான் இருக்கிறது சித்ரா..''

''புரியவில்லையே.. மனோகரிடம் இதுபற்றி பேசினாயா?''

''பேசினேன்..''

''என்ன சொல்கிறார்?''

''அவர் சொன்ன ஐடியாவைக் கேட்டால் நீ பயந்து விடுவாய்..''

சித்ராவுக்கு கவிதா இப்படி விழுங்கி விழுங்கிச் சொல்வது எரிச்சலை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆசுயையாய் உதடுகளை சுழித்தவள், ''ஐயோ அக்கா, நீ இப்படி விட்டேற்றியாய் வெறுமையாய் பேசுவதுதான் பயத்தைக் கொடுக்கிறது முதலில் நீ விஷயத்தைச் சொல்'' என்றாள்.

''மனோகர் யாருக்கும் தெரியாமல் திருட்டுக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்கிறார். நம் காதல் வெற்றி பெற அது ஒன்றுதான் வழி! என்கிறார்.''

சொல்லிவிட்டு தனது பதிலுக்கு சித்ரா வெகுவாய் அதிர்வாள் என எதிர்பார்த்தவள் சித்ராவின் முகத்தைப் பார்த்து வியக்கவே செய்தாள்.

அவள் சொன்னதை மனோகரின் கூற்றை ஆமோதிப்பது போல் தலையசைத்துக் கொண்டிருந்தாள் சித்ரா.

''என்ன சித்ரா தலையசைக்கிறாய்?''

''நான் எதிர்பார்த்ததுதான்..''

''எதிர்பார்த்தாயா?''

கவிதாவின் வியப்பிற்கு தனது நீளமான கூந்தழலை ஸ்டைலாக சித்ரா தள்ளி விட்டாள். ''அக்கா, உன் காதலை வெற்றி பெற இது ஒன்றுதான் வழி. அப்பா ஒருபோதும் உன் காதலை அனுமதிக்கப் போவதில்லை'' என்றாள் தெளிவான குரலில்.

''அதற்காக?''

''துணிந்து சில முடிவுகளை எடுக்க வேண்டியதுதான்..''

''அப்பாவை எதிர்த்தா..?''



ஆழமாய் தங்கையின் முகத்தை உற்றுப் பார்த்து அதில் ஓடும் உறுதியான ரேகைகளை ஆச்சரியமாய் பார்த்தாள்.

தங்கைக்கு எப்படி இந்தத் துணிவு வந்தது?

ஒரு காலத்தில் சிறு வயதில் அப்பாவைக் கண்டாலே பயந்து நடுங்குகிறவள் பேசுகிற பேச்சா இது?

மறுபடியும் யோசனையா?

தன் முன் சித்ரா சொடுக்கிட்டு யோசனையை சிந்திப்பை கலைத்தபோது கவிதா தன்னையறியாமல் மறுபடியும் பேந்தப் பேந்த விழிக்கத்தான் செய்தாள்.

''அக்கா, இதோ பார் நான் உன்னை விட சிறியவள், நானே இவ்வளவு துணிவாய் இருக்கும்போது... நீ இப்படி கோழைத் தனமாய் இருப்பது ஆச்சரியத்தைக் கொடுக்கிறது..''

''இல்லை சித்ரா... காதலுக்காக யாருக்கும் தெரியாமல் கல்யாணம் செய்வது.. கொஞ்சமும் முறையல்லவே..''

அவளை மேலே பேச விடாமல் சித்ரா சிரிக்க ஆரம்பித்தவள், ''இதற்குத்தான் நாலு சினிமா பார்க்க வேண்டும். நாலு கதை படிக்க வேண்டும் என்கிறது. அதிலெல்லாம் காட்டாத, சொல்லாத விஷயங்களையா நீ செய்துவிடப் போகிறாய்? இல்லையே..! அவைகளில் எல்லாம் காட்டி புளித்துப் போன விஷயத்தைத்தான் நீ செய்யப் போகிறாய். அதனால் வீணாய் யோசித்து மனதை அலைய விடாமல் நடக்கிற கதையைப் பார்..''

சித்ரா சொல்லி முடித்தாள். கவிதா இன்னமும் அதே மௌனத்தில் இருந்தாள்.

சித்ராவே தொடர்ந்து ''அது இருக்கட்டும், மனோகரின் குடும்ப நிலை எப்படி? பெரும் பணக்காரரா? நல்ல வசதியுள்ளவரா?'' என்றாள்.

சித்ரா அந்தக் கேள்வியைக் கேட்டதும்தான் கவிதாவிற்கு சுரீரென்றது. அவளும் மனோகரிடம் எத்தனை முறை, எத்தனை விஷயங்களில் பேசியிருக்கிறாள்.

ஒரு நாளாவது அவனது குடும்பத்தைப் பற்றி விசாரித் திருக்கிறாளா... இல்லை மனோகர்தான் அவளிடம் சொல்லியிருக்கிறானா..?

மனோகர் ஹாஸ்டல் மாணவன், அவனது பூர்வீகம் ஏதோ கிராமத்துப் பக்கம். அங்குதான் அவனது தாய் தந்தையர்கள் இருப்பதாய் கேள்வி. இதுதான் மற்றவர்கள் சொல்ல மனோகர் பற்றி அவள் அறிந்த செய்தி.

மற்றபடி மனோகர் பற்றி குடும்பத்தில் மூத்தவனா? அவனுக்குச் சகோதர சகோதரிகள் உண்டா? அவனது குடும்ப நிலைமை எப்படி? என்பது பற்றியெல்லாம் அவளுக்கு துளியும் தெரியாதே!

தங்கையின் கேள்விக்கு விழித்து, ''நிஜமாகவே, அதுபற்றி ஒன்றும் தெரியாது. நான் மனோகரிடம் விசாரித்தது கூட இல்லை''.. என குற்ற உணர்வுடன் கவிதா மருகியபோது அதை ஆவலாய் வரவேற்றாள் சித்ரா.

''சபாஷ்... இதுதான் உண்மையான காதல்...!'' என்றாள்.

''என்ன சித்ரா சொல்கிறாய்?'' நம்ப முடியாமல் பார்த்தாள் கவிதா.

''அக்கா, இப்படி ஒருவரைப் பற்றி ஒருவர் தெரிந்து கொள்ளாமல், குடும்பப் பின்னணியை அறிந்து கொள்ளாமல்



ஏற்படுவதுதான் உண்மையான மனம் ஒத்த காதல்! நீயும் மனோகரும் தான் நிஜமான காதல் ஜோடிகள். சந்தேகமே யில்லை!'' விளக்கமும் கொடுத்தாள் சித்ரா.

தங்கையின் அந்த அறிவு பூர்வ காதல் விளக்கத்தைக் கண்டு ''அட.,. என் அறிவுக் கொழுந்தே..'' என்று அதிசயித்து விட்டு ''கடைசியில் நீ என்னதான் சித்ரா சொல்கிறாய்? உன்னுடைய முடிவுதான் என்ன?'' என்றாள் கவிதா.

சித்ரா தலைசாய்த்து பார்த்தவள், ''இன்னுமா புரியவில்லை! பேசாமல் மனோகர் சொல்வது போல் ரகசியமாய் கல்யாணத்தை நடத்தி விடு. பின் சினிமாவில் காட்டுவது போல் மாலையும் கழுத்துமாக அப்பாவின் முன் வந்து நில். என்ன அப்பா.. இரண்டு நாள் பிகு செய்வார். கோபப்படுவார்.. அவ்வளவுதான்... மூன்றாம் நாள் எல்லாம் சரியாகி விடும்..'' என்றாள் சித்ரா சாதாரணமாய்.

''என்ன சித்ரா கடைசியில் அப்பாவை எதிர்த்து கல்யாணம் கட்டிக் கொள்ளவா? அவர் வைத்திருக்கும் நம்பிக்கையை மோசம் செய்வதா?''

''வேறு வழியே இல்லையே.. அக்கா, நீ கொஞ்சம் யோசித்துப் பார்.. இப்படிச் செய்யாவிட்டால், என்ன நடக்கும்? உன் வாழ்க்கை எப்படி இருக்கும்? அப்பாவிற்கு பயந்த நீ காதலை மறப்பாய். வேறு யாரோ ஒருவனுக்கு கழுத்தை நீட்டுவாய். மனதுக்கு பிடித்தவன் கிடைக்காமல் வந்தவனை யும் ஏற்றுக் கொள்ளாமல்... காலம் பூராவும் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருப்பாய்... இதுதானே நடக்கும். இப்போது யோசி, எந்த வாழ்க்கை உனக்குத் தேவையென நீயே முடிவெடு!''

அதற்கு மேல் பேச சலித்தவள் போல் சித்ரா அவளை சிந்திக்க விட்டபடி அகன்று விட்டாள்.

கவிதா அப்படியே இடிந்து போனவள் போல் உட்கார்ந்து விட்டாள்.

தலை பாரமாய் அழுத்த... யோசிக்க ஆரம்பித்தாள்.

அவள் யோசிக்க.. யோசிக்க.. சித்ரா சொன்ன வார்த்தைகள் மனதை கலவரப்படுத்தி ஸ்தம்பிக்க வைத்தது. கடைசியில் எல்லா பாரத்தையும் கடவுள் மீது போட்டவளாய் தீர்மானமாய் ஒரு முடிவும் எடுத்தாள் கவிதா.



6

எண்ணங்களின் சக்தி எத்தகையது என்று அன்றுதான் முழுமையாக கவிதாவும் உணர்ந்திருந்தாள். சிந்தித்து சிந்தித்து அவள் வாழ்க்கைப் பாதையே மாறப் போகிறதே!

நேற்று வரை காதல் என்றால் என்ன என்று கூட தெரியாதவள் இன்று ஒருவனைக் காதலித்து அந்த காதலுக்காக அவனை திருட்டுத்தனமாய் கல்யாணம் செய்து கொள்ளும் மளவுக்கு வந்து விட்டாளே!

நேற்று இரவு தூக்கம் வராமல் கவிதா டி.வி சேனல் ஒன்றை திருப்பியபோது அதில் ஓடிக் கொண்டிருந்த ஒரு திரைப்படம் அவள் கவனத்தை கவர்ந்தது.



திரைப்படத்தின் கதையும் ஏறக்குறைய அவளது சூழ்நிலையைப் போன்றதுதான்!

கதாநாயகியின் காதலுக்கு வீட்டில் எதிர்ப்பு கிளம்புகிறது. வீட்டை எதிர்த்து வீட்டுக்குத் தெரியாமல் கதாநாயகனின் கரம் பிடிக்கிறாள் அவள். பின் இருவருக்கும் கல்யாணம் நடந்த விஷயம் தெரிந்ததும். இரு குடும்பங்களும் பகையை மறந்து அவர்களை மன்னிக்கிறது. மன்னித்து ஏற்றுக் கொள்கிறது.

கவிதா அந்தத் திரைப்படத்தை ஆவலாய்ப் பார்த்தாள். நிஜமாகவே தன் வாழ்விலும் அப்படித்தான் நடக்குமோ, என உருகத்தான் செய்தாள். தங்கை சித்ரா சொல்வது போல் மாலையும் கழுத்துமாய் தந்தையின் முன் வந்து நின்றால் அவர் ஏற்றுக் கொள்ளத்தானே செய்வார்? அதைத் தவிர அவருக்கு வேறு வழி இல்லையே!

மேலும் மேலும் யோசித்தவள் கடைசியில் தெளிந்தும் விட்டாள்.

அன்று கல்லூரிக்குள் நுழைந்ததுமே தன்னைப் பார்த்து விழாத குறையாய் ஓடோடி வந்த மனோகரிடம் விஷயத்தைச் சொன்னாள்.

அவள் தன் திட்டத்திற்கு சம்மதம் சொல்வாள் என அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை போலும்!

அப்படியே ஆடிப்போய்விட்டான் மனோகர். நம்ப முடியாத வனாய் நிஜமாகவா? நிஜமாகத்தானே கவிதா சொல்கிறாய்? என பரபரப்புடன் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டாள்.

கவிதா தன் காதுமடல்கள் அதிர தலையசைத்து அவனுக்கு உறுதி கொடுத்தாள்.

மனோகரின் மூளை துறுதுறுவென இயங்கியது.

''கவிதா, இனிமேல்தான் நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்றான்.

''என்ன சொல்கிறான் இவன்?'' புரியாமல் பார்த்தாள் கவிதா.

நான் கச்சிதமாய் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். நீ நம்முடைய இந்த விஷயத்தை யாரிடமும், உன் நெருங்கிய தோழிகளிடம் கூட சொல்லாமல் ரகசியம் காக்க வேண்டும். அப்படி செய்தால்தான் நாம் வெற்றி பெற முடியும்.'' மனோகரன் சொன்னதற்கு எல்லாம் அதற்கும் பூம் பூம் மாடாய் தலையசைத்தாள் கவிதா. அவளைப் பொறுத்தவரையில் சிந்தித்து ஒரு முடிவெடுத்தாயிற்று. தவறோ.. சரியோ.. இனி பிரச்சனையில் இருந்து பின் வாங்க முடியாது. சாண் போனால்.. என்ன முழம் போனால் என்ன என்று துணிந்துவிட வேண்டியதுதான்!

அதே விட்டேற்றியான மனநிலையில்தான் மனோகர் சொன்னதற்கெல்லாம் தலையாட்டினாள். அவன் சொன்னபடியெல்லாம் நடக்க ஆரம்பித்தாள்.

கச்சிதமாய், பிளான் செய்திருந்தான் மனோகர்.

அதன்படி அன்றைய வார இறுதியில் யாருக்கும் தெரியாமல் கவிதா பெட்டியும் கையுமாய் கிளம்பி வந்து விட வேண்டும். ரெயில்வே ஸ்டேஷனில் அவளுக்காக மனோகர் தயாராக நிற்பானாம். இருவரும் அன்றே ரயில் பிடித்து சென்னை செல்கிறார்களாம். சென்னையில் மானேகரின் உயிர் நண்பன் இருக்கிறானாம். அவன் வீட்டில் தங்கி விட்டு பின் நண்பர்கள் முன்னிலையில் கோயிலில் வைத்து தாலி கட்டி கல்யாணம் செய்து கொள்வார்களாம். கல்யாணம் முடிந்ததும் அன்றே ஊர் திரும்பி கவிதாவின் தந்தை காலில் வந்து விழுவார்களாம்... எப்படியாவது கதறியோ... கெஞ்சியோ அவரை ஏற்றுக் கொள்ளும்படி செய்து விடுவார்களாம்...



கேட்க கேட்க கவிதாவுக்கு திருப்தியாய்த்தான் இருந்தது. ஆனால் எல்லாம் மனோகர் சொல்லியபடி நடக்குமா? என்ற பயமும் எழுந்து அடிக்கடி அவளை ஸ்தம்பிக்க வைத்தது.

ஆயிற்று, மனோகர் குறித்த நாளும் வந்தாயிற்று. கவிதா அன்று காலையில் எழுந்தவள் தாங்க முடியாத குழப்பத்தில் தான் தங்கையைத் தேடி வந்தாள்.

தங்கையைப் பார்த்ததும், ''சித்ரா, ஒரே குழப்பமாய்.. பயமாய் இருக்கிறது. போகிற போக்கில் பைத்தியமே பிடித்து விடும் போல் இருக்கிறது'' - தலையைப் பிடித்தபடி கவிதா சொல்ல.. சித்ரா நெருங்கியவள் ஆதரவாய்ப் பிடித்து அணைத்துக் கொண்டாள்.

கவிதாவின் கண்ணில் விழுந்திருந்த கூந்தல் சுருளை ஒதுக்கி நிமிர்த்தியவள், ''நீ ஒன்றும் பயப்பட வேண்டாம். எல்லாம் நல்லபடியாக நடக்கும்..'' என்றாள் உறுதியான குரலில்.

தங்கைக்கு இருக்கும் உறுதி தனக்கில்லையே என ஒரு கணம் கவிதா வியந்தவள் தந்தை தில்லைநாதரை காணும் போதெல்லாம் உள்ளுக்குள் நடுங்கத்தான் செய்தாள்.

ஆனால் சித்ரா அதற்கும் தைரியம் கொடுத்தாள்.

''சும்மா அப்பாவையே நினைத்து மருகிக் கொண்டிருக்காதே, ஓரிரு நாள் கோபப்படுவார். அத்தோடு சரி, அப்பாவைப் பற்றி உனக்குத் தெரியாதா? தைரியமாய் நீ கிளம்பு'' என்றாள்.

தலைக்கு மேல் வெள்ளம் போயாயிற்று. இனி யோசித்தோ.. குழம்பியோ எவ்வித பிரயோஜனமுமில்லை. பின்வாங்கவும் முடியாது. வருவது வரட்டும் என கிளம்பி விட வேண்டியது தான்.

கவிதா அதன்பின் மனநிலையைக் கட்டுப்படுத்தியவள் மனதில் எந்த உணர்ச்சிக்கும் இடம் கொடாமல் ஒரு மரப்புடன் குறிப்பிட்ட நேரத்தில் தங்கையிடம் மட்டும் சொல்லிக் கொண்டு பெட்டியுடன் கிளம்பினாள்.

தான் செய்யப் போவது எவ்வளவு முட்டாள்தனமான காரியம் என்பது அப்போது அவளுக்குக் கொஞ்சமும் உரைக்கவில்லை.



## 7

பெட்டியும் கையுமாய் யாரும் பார்த்துவிடக் கூடாதே என்ற பயத்தில் கவிதா ரெயில்வே ஸ்டேஷனை அடைந்தபோது அங்கு தயாராய் நின்றிருந்தான் மனோகர்.

அவளைப் பார்த்ததும்தான் உயிரே வந்தது போல் அவன் உற்சாகமானான்.

ஆவலாய் ஓடாத குறையாய் வந்து பெட்டியை வாங்கியவன், ''எங்கே நீ வராமல் போய் விடுவாயோ என்று பயந்து விட்டேன்.. கவிதா'' - என்றான் மூச்சு வாங்க.

கவிதா அவனை உற்றுப் பார்த்தவள் கொஞ்சமும் பொருத்தம் இல்லாமல் சாம்பல் கலர் ஜீன்சும் சிவப்புக் கலர் சட்டையுமாய் இவன் இருப்பதைக் கண்டு வியக்கவே செய்தாள்.



யாரும் பார்த்துவிடக் கூடாது. உள்ளே போய் உட்கார்ந்து விடுவோம்... அவளைப் போலவே அவனும் பரபரத்து கவிதாவை பெட்டியினுள் கூட்டிப் போனான்.

ஏற்கனவே ரிசர்வ் செய்திருந்த வீட்டைக் கண்டுபிடித்து இருவரும் உட்கார்ந்து கொண்டனர். மனோகரன் தன் பங்கிற்கு சிறிய லெதர் பேக் ஒன்று மட்டும் வைத்திருந்தான்.

அவள் வியப்பதைப் பார்த்து, ''அவசரத்தில் இது மட்டும் தான் எடுத்து வந்தேன். நண்பர்களிடம் வாங்கி அட்ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டியதுதான்..!'' என விளக்கமும் கொடுத்தான்.

கவிதா பயத்துடன் அதுவரை உள்ளுக்குள்ளே நினைத்து மருகிக் கொண்டிருந்தவள் அவள் சொல்ல வேண்டிய வார்த்தைகளை கண்டிப்பாய் மனோகரிடம் சொல்லி விட வேண்டும் என்பதுபோல் மனோகரை நோக்கித் திரும்பினாள்.

''இதோ பாருங்கள் மனோகர் நான் உங்களை நம்பித்தான் வருகிறேன். நீங்கள்தான் என்னைக் கைவிட்டு விடாமல் காப்பாற்ற வேண்டும். நல்ல ஒரு வாழ்க்கையை எனக்கு அமைத்துத் தர வேண்டும்..''

அவ்வளவு வீராப்பாய் அதுவரை நடந்து கொண்டவள் இப்படி அஞ்சி நடுங்குவதை மனோகரே எதிர்பார்க்கவில்லை போலும்!

கண்கள் அகல வீசிய அவளை அதிசயமாய் பார்த்தவன், ''அட, என்ன கவிதா இது குழந்தை மாதிரி! நீ எதற்கும் கவலைப்பட வேண்டாம். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ பேசாமல் பாரதியை நினைத்துக் கொள். தைரியம் உனக்கு தானாய் வரும்...'' என அவளுக்கு உற்சாக விளக்கமும் கொடுத்தான் மனோகர்.

மனோகர் சொல்லியது போல் அஞ்சி நடுங்கும் அந்த மனநிலையில் மகாகவி பாரதியை நினைப்பது கவிதாவிற்கு அவசியமாயிருந்தது.

அந்தப் புரட்சிக் கவியின் உத்வேகமான பாடல் வரிகள் மனதுள் உயிர் பெற்று ஓடின.

ஒரு கணம் வாழ்க்கைப் பாதையில் பெரும் புரட்சி செய்யும் புதுமைப் பெண் போல் தன்னை உணர்ந்து கொண்டாள் கவிதா.

ரயில் கிளம்பியது.

மெல்ல ஸ்டேஷனில் இருந்து ரயில் வேகமெடுத்தபோது அவளது மனமும் வேகமெடுத்து சிந்தித்தது. இந்நேரம் அப்பா வீடு திரும்பியிருப்பார். அவளைக் காணாது தங்கையிடம் விசாரித்து…

ஒரு கணம் விஷயத்தை அறிந்ததும் அவர் மனம் என்ன பாடுபடும் எனவும் நினைப்பு கவிதாவை இம்சைப்படுத்தியது.

மனம் தத்தளித்தவளாய் மனோகரைப் பார்த்தாள்.

அவன் இறுகிய முகத்துடன் வெளியே பராக்குப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் எவ்வித உணர்ச்சியோ எவ்வித பதட்டமோ இல்லாதது கவிதாவை வியக்க வைத்தது.

எப்படித்தான் சில மனிதர்களால் இப்படி எது பற்றியும் கவலையுமில்லாமல் விட்டேந்தியாய இருக்க முடிகிறது என அதிசயித்தாள். அப்படி இருந்து விட்டால் வாழ்க்கையில் நடக்கும் எது பற்றியும் லட்சியம் பண்ணத் தேவையில்லையே என்று கூட தோணியது.



என்னதான் சமாதானம் சொன்னாலும் எவ்வளவுதான் சிந்தித்தாலும் நெஞ்சு படபடப்பை மட்டும் அவளால் கொஞ்சமும் அடக்க முடியவில்லை.

செய்வது சரிதானா? மனோகரை நம்பி வீட்டை விட்டு வெளியேறி விட்டாளே.. இனி அவன் தாலி கட்டி… திரும்ப அப்பாவிடம் வந்து மன்னிப்புக் கேட்டு.. பேசி.. அவரை சமாதானப்படுத்தி… இதெல்லாம் நடக்கக் கூடிய காரியமா?

நினைக்க நினைக்க அவளது இதயத் துடிப்பும் அதிகரித்தது.

பெரிய பெரிய மூச்சுக்களை நிதானமாக எடுத்து விட்டுத் தன் இதயத் துடிப்பை சமன்படுத்தலானாள். எல்லாவற்றுக்கும் மேல் நம்பி வந்திருக்கும் மனோகர் நல்லவன்தானா? என்கிற கேள்வி திடீரென விசுவரூபமெடுத்து அவளை ஆட்டியது.

ஒருகணம் அவளது நிலை இராமாயணத்தில் அசோக வனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதையின் நிலைக்கு ஒப்பாக இருந்தது.

இராவணன் சீதையை சிறை வைத்ததோடு அல்லாமல் அவள் மன நிலையை மாற்ற தன்னை மணந்து கொள்வதற்காக வெவ்வேறு தந்திரங்களைச் செய்தானாம். இரண்டு அரக்கிகளிடம் அதற்கான பொறுப்பை ஒப்படைத்திருந்தானாம். அந்த அரக்கிகளும் வெவ்வேறு மாயத் தோற்றங்களில் சீதை முன் வந்து நல்லவர்கள் போல் நடித்து அவளது மனநிலையை மாற்ற முயன்றார்களாம்.

தூதர்கள் போலவே வேஷமிட்டு மனதை கலைக்க முயன்றார்களாம். அந்த நேரத்தில் தான் காடுமலையெல்லாம் திரிந்து அனுமனும் சீதையைக் கண்டுபிடித்தான். அனுமன் கண்டு பிடித்து சீதை முன் போய் நின்றபோது அவன் இராமன்

தூதுவன்தானா? இல்லை இராவணனால் அவள் மனதை மாற்ற அனுப்பப்பட்ட மாயத் தோற்றமா.. என்ற சந்தேகமே சீதையின் மனதில் மிஞ்சி நின்றது.

அவளால் எதையும் நம்ப முடியவில்லை. நடப்பதெல்லாம் உண்மைதானா.. அல்லது பெரும் சூழ்ச்சியில் அவளை சிக்க வைக்கும் நிகழ்ச்சிகளா என்று புரிந்து கொள்ள முடியாமல் தவித்தானாம்.

அதுபோல்தான் கவிதாவின் நிலையும் இருந்தது. மனோகரை அவளால் முழுவதும் நம்ப முடியவில்லை. அதே நேரம் வேறு வழியின்றி நம்பாமலும் இருக்க முடியவில்லை.

மனோகர் அடிக்கடி திரும்பி அவளை பதட்டமான பார்வையில் பார்த்தவள், கரங்களால் அவனது கைகளை அழுத்தி, ''கவலைப்படாதே. எல்லாம் நல்லபடியாக நடக்கும்'' என ஆறுதலும் படுத்தினான்.

வண்டி திருச்சி ஸ்டேசனில் நின்றபோது இறங்கிப் போய் பார்சல் உணவு வகைகளையும் பழங்களையும் வாங்கி வந்தான்.

மணி இரவு ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது.

அது படுக்கும் வசதி செய்யப்பட்ட காம்பார்ட்மெண்ட். ஆள் ஆளுக்கு உணவு பதார்த்தங்களை சாப்பிட்ட கையோடு படுக்கத் தயாராகி விட்டனர்.

கவிதா யோசித்தவாறே மனோகர் கொடுத்த உணவுப் பொட்டலத்தைப் பிரித்தாள். பார்சலைக் கொடுக்கும்போது மனோகர் பக்கம் சிகரெட்டின் வாசனை அடிப்பதாய் தோன்றியது.



சிகரெட் பிடிக்கும் பழக்கம் உண்டா? இதுவரை அவன் சிகரெட் குடித்து அவள் பார்த்ததில்லை. இன்று குடித்திருப்பானோ?

அவள் நினைத்தபடி மறுபடியும் அவன் பக்கம் திரும்பிய போது அவளுக்கு பகீரென்றது. கொஞ்சமும் சங்கோஜமில்லாமல் பாக்கெட்டிலிருந்து சிகரெட் ஒன்றையெடுத்து பற்ற வைத்துக் கொண்டிருந்தான் மனோகர்.

ஆனாலும் கவிதா நிதானப்படுத்திக் கொண்டாள். சிகரெட் குடித்தால் கெட்டவனா? அப்படியானால் எத்தனை பேர் குடிக்கிறார்கள்? அத்தனை பேரும் கெட்டவர்களா? என தனக்கு சமாதானமும் சொல்லிக் கொண்டாள்.



## 8

மனோகரிடம் இன்னொரு மாற்றத்தைக் கவனித்து கவிதா வியந்திருந்தாள். வழக்கமாய் சளசளவென அவளுடன் பேசிக் கொண்டிருப்பவன் இப்போது இடித்தபுளி போல் மௌனமாகவே வந்து கொண்டிருந்தான்.

கவிதாதான் இடையிடையே பேச்சுக் கொடுத்தாள். அவனது மனநிலையை அறிய முயன்றாள். ஆனால் மனோகர் பேச்சை வளர்க்காமல் சுருக்கமாய் முடித்துக் கொள்வான்.

ஆயிற்று. ஒரு வழியாய் சென்னையை அடையும் வரை தவித்துக் கொண்டுதான் இருந்தாள். இரவு முழுவதும் தூங்காது

கொட்ட கொட்ட விழித்திருந்தாள். அடிக்கடி தங்கை சித்ராவை, அவளின் வார்த்தைகளை நினைத்து தைரியப்படுத்திக் கொண்டாள்.

மனோகரோ இடையிடையே அவளைப் பார்த்து ''என்ன தூங்கவில்லையா?'' என்று கேட்டபடி அவன் தூங்கிக் கொண்டிருந்தான்.

அப்படியும் இப்படியுமாய் தவித்து அவஸ்தைப்படும் மனநிலையோடு கவிதா சென்னையை அடைந்தபோது காலை மணி ஏழு.

ஸ்டேஷனில் மனோகரனின் நண்பர்கள் யாரும் இருக்கவில்லை. வருகிற மாதிரியும் தெரியவில்லை. மனோகரன்தான் அவளை நிற்க வைத்துவிட்டு வேகமாய் இருபுறமும் போய் தேடினான்.

கடைசியில் சலித்தவன் போல் 'மெனக்கெட்டு போன் செய்து சொன்னேன். வராமல் சொதப்பி விட்டார்கள்'' என்றபடி கைகளைப் பிசைந்தான்.

அவனது பதிலைக் கேட்டு கவிதா கலவரமாகிப் போக, அவளை சமாதானப்படுத்தி, ''பயப்படாதே, இப்போதைக்கு லாட்ஜ் ஒன்றில் நாம் தங்கிக் கொள்வோம்..!'' என்றான்.

''என்ன லாட்ஜிலா?''

அதிர்ந்து போனவளை சர்வ சாதாரணமாய்ப் பார்த்தான் மனோகரன்.

''அதிலென்ன தப்பு கவிதா? நண்பர்களைச் சந்தித்து நம் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை பண்ண வேண்டுமே.. அதுவரை நாம் எங்கு தங்குவது? தெருவில



நின்று கொண்டிருக்க முடியும்?'' என எதிர் கேள்வியும் கேட்டான். கவிதாவிற்கு வேறு வழியில்லை.

பலியாடு போல் அவன் சொன்னதற்கெல்லாம் தலையாட்டி பின் தொடர்ந்தாள். கூடவே, மனோகரனின் குழையும் பேச்சு மெல்ல மெல்ல உயர்ந்து அதிகார கர்ஜனையாக மாறி வருவதையும் அவளால் உணர முடிந்தது.

மனோகர் லாட்ஜ் ஒன்றில் ரூமெடுத்து அவளைக் கூட்டிப் போனான். லாட்ஜின் படியேறுகையில் ரிசப்ஷனிலிருந்தவன் அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தது கண்டு கூசித்தான் போனாள் கவிதா.

அவன் நினைப்பு நியாயம்தானே! கழுத்தில் தாலி கூட இல்லை. அந்நியன் ஒருவனுடன் லாட்ஜில் தங்க வந்தால்.. அவன் மனதில் என்ன கணக்குப் போடுவான்?

அதே தவிப்புடன் லாட்ஜ் ரூமினுள் நுழைந்து கொண்டாள். மனோகரன் உள்ளே நுழைந்ததும், படபடவென உடைமாற்றி பாத்ரூமினுள் குளிக்கப் போய்விட்டான்.

பத்து நிமிடத்தில் வெளியே வந்தவன் அதே வேகத்தில் கிளம்பவும் ஆரம்பித்தான். புரியாமல் விழித்தவளிடம், ''நான் சென்று நண்பர்களைப் பார்த்து நம் கல்யாணத்திற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். போய் வந்து விடுகிறேன். கதவை நன்றாகச் சாத்திக் கொள்..'' என்றான்.

அவள் பதிலுக்குக் காத்திராமல் அவன் கிளம்பியும் விட்டான்.

அவன் சென்றதும் கதவை இறுக மூடிக் கொண்டு மெத்தையில் அமர்ந்தாள்.

தலையில் கைவைத்து யோசிக்க யோசிக்க அவளுக்கு உலகமே இருள்வது போலிருந்தது.

உடம்பு அதிர யோசித்தாள்.

எவ்வளவு பெரிய காரியத்தை பண்ணியிருக்கிறாள்!

அப்பாவை எதிர்த்து வீட்டுக்குத் தெரியாமல் கிளம்பி லாட்ஜில்.. தங்கிக் கொண்டு... எப்படி இவ்வளவு துணிச்சல் வந்தது அவளுக்கு?

எவ்வளவு பெரிய விஷயம்! ஒரு பொறுப்பான குடும்பப் பெண் செய்கிற காரியமா இது? மெல்ல மெல்ல அவளுள் அந்தக் குமிழ் பெரிதாகி உடைந்தது.

எவ்வளவு தவறான முடிவு?

தந்தை சம்மதிக்க மாட்டார் என காதலனுடன் கிளம்பி வந்து கல்யாணம் செய்து கொள்ள திட்டம்.... எவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனம்!

இன்னும் படிப்பு கூட முடியவில்லையே! அதற்குள் கல்யாணத்திற்கு என்ன அவசரம்?

நினைக்க.. நினைக்க.. தான் ஏன் முன்பு இப்படியெல்லாம் சிந்திக்காமல் போனோம்.. என்ற எரிச்சலும் மூண்டது.

அதே எரிச்சலுடன் தலைகவிழ்ந்து அவள் எவ்வளவு நேரம் யோசித்துக் கொண்டிருந்தாள் என்று அவளுக்கே தெரிய வில்லை.

கதவை தட்டும் ஓசை அவளை உணர்வுக்குக் கொண்டு வந்திருந்தது.

திறந்தாள்.



மனோகரன்தான்! தன் அத்தனை பற்களையும் காட்டி சிரித்தபடி உள்ளே நுழைந்தான். அவனது இளிப்பு அவளுக்கு முதன் முறையாய் பயத்தைக் கொடுத்தது.

அவனே சிரிப்பு மாறாமல் கதவைச் சாத்தியவன், மெத்தை யில் உட்கார்ந்தான். அவளையும் இழுத்து தன் பக்கம் உட்கார்த்திக் கொண்டான். ''நீ பயப்படாதே எல்லா ஏற்பாடுகளும் பண்ணியாயிற்று... நாளை நாம் கல்யாணம்..'' என்றான். பேசியபடி தன் தோளை அணைத்த அவனது கைகளை விலக்கி அவனைப் பார்த்தாள் கவிதா.

''மனோகர் நான் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்..''

யோசித்து வைத்த விஷயத்தை மெல்ல கவிதா ஆரம்பித் தாள்.

''பேசு.. பேசு... அதற்காகத்தானே உட்கார்ந்திருக்கிறேன்..!'' மனோகர் பரபரத்தவன் இம்முறை கைகளைக் கொண்டு அவளை அணைக்கவே போனான். வலுக்கட்டாயமாய் அதை விலக்கி அவனை நேராய்ப் பார்த்தாள்.

''மனோகர் நாம் அவசரப்பட்டு விட்டோம். தப்பான முடிவு எடுத்து விட்டு விட்டோம்.. என எனக்குத் தோணுகிறது..''

அவள் கேட்டதும் மனோகர் முதன் முதலாய் பார்வையில் அதிர்ச்சியைக் காட்டினான்.

''தப்பான முடிவா?''

''ஆம் மனோகர். நாம் கொஞ்சமும் யோசிக்கவில்லை. அவசரப்பட்டு விட்டோம். இன்னும் நமக்கு படிப்பே முடிய வில்லையே! அதற்குள் கல்யாணத்திற்கு என்ன அவசரம்?''

அவள் கேட்க கேட்க அவனது முகம் கோணலாக மாறியது.

"நீ என்ன சொல்கிறாய்?"

"நாம் தவறாக சிந்தித்து விட்டோம். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இப்போது நமக்கு கல்யாணத்தை விட படிப்புதான் முக்கியம். அந்த படிப்பை வைத்துதான் ஏதாவது வேலை தேடி நம் எதிர்காலத்தையே அமைத்துக் கொள்ள வேண்டிய அவசியமும் நமக்கு இருக்கிறது.."

மனோகர் ஏதோ சிந்திப்பது போல் கண்களை உருட்டினான். அவள் முகக் குறிப்பை தீவிரமாய் ஆராய்ந்தான்.

கவிதா பேசியவள் அதே உறுதியுடன் எழுந்தும் விட்டாள். "ஆகவே.. நாம் உடனே ஊருக்குக் கிளம்பி விடுவோம் மனோகர். அப்பாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நாம் படித்து.. அப்பாவின் மனதை மாற்றி பின்னர் கல்யாணம் செய்து கொள்ளலாம்.." அவள் சொல்லிக் கொண்டே போக மனோகர் பொறுமையிழந்தவனாய் எழுந்தான்.

அவளை நெருங்கியவன் அவளது இரு தோள்களையும் படாரென அழுந்தப் பிடித்துக் கொண்டான். கவிதா அவன் வலுவான பலத்தை முதன் முறையாய்க் கண்டு அதிரத்தான் செய்தாள்.

"இதோ பார் கவிதா.. நீ சொன்னதையெல்லாம் நம்பிக் கொண்டு கேட்க நான் ஒண்ணும் முட்டாளில்லை. நான் ஒரு திட்டத்துடன் தான் உன்னை இங்கு கூட்டி வந்திருக்கிறேன்.." என்றான் மனோகர் வில்லமான சிரிப்பைக் காட்டியவாறு.

"திட்டமா?" நடுங்காத குறையாய் கவிதா கேட்டாள்.

"ஆம். பணம் காய்க்கும் திட்டம்! உன் அழகை நன்றாக அனுபவித்து விட்டு அந்த அழகிற்கு நல்ல விலை பேசி விற்று



விடும் திட்டம்! மற்றபடி கல்யாணம் அது இதுவென நான் புளுகியது உன்னை நம்ப வைக்கத்தான்! அது சரி நேரத்தை வீணாக்குவானேன்... சீக்கிரம் படுக்கைக்கு வா.. உன்னை அனுபவித்துப் பார்த்து விட்டு இன்றிரவே மும்பைப் பார்ட்டிக்கு உன்னை ஒப்படைக்க வேண்டும். உனக்கு விலையும் பேசி விட்டேன்..!" என்றபடி வெறிப்பிடித்த புலிபோல் மனோகர் பாய்ந்தபோது கவிதா தடுமாறித்தான் போனாள்.

மனோகர் சொன்னதையும், நடப்பதையும் ஒரு கணம் அவளால் உணர முடியவில்லை. மூளையில் உரைக்கவும் இல்லை!

முற்றிலும் உணர்ந்த போது.. மனோகர் கடித்துக் குதறும் புலியாய் அவள் மீது பாய்ந்திருப்பது தெரிந்தது.

என்ன அநியாயம்! காதலனே காமுகனாய் அவளை பலவந்தப்படுத்திக் கொண்டு.. கடவுளே.!

துடித்து சீறி எழுந்தவளாய் தன் பலம் முழுவதையும் திரட்டினாள்.

அவனை அப்படியே ஓங்கித் தள்ளினாள். அவளின் முழு மூச்சான வேகத்தில் தூரமாய் போய் விழுந்தான் மனோகர்.

அடிபட்ட புலியாய் அவன் எழுந்து அவளை விரட்டு வதற்குள் பாய்ந்து கதவுப் பக்கம் ஓடினாள் கவிதா.

ஓடி ஒரே திருகில் கதவைத் திறந்து அவள் ரூமை விட்டு வெளி வந்து தலைதெறிக்க ஓடினாள்.

ஓடி எதிரில் வந்தவன் மேல் அப்படியே மோதினாள். நிலை தடுமாறி சாய்ந்தாள்.

நடுங்கிய அவளது உடம்பை ஆதரவாய் அவனது கைகள் பிடித்துக் கொண்டன.

நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவனது அசாத்தியமான கம்பீரமான முகம் அவன் எப்படியும் தன்னைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையை அவளுக்கு தந்தது போலவும்!

அப்படியே அவனது கரங்களில் மயங்கிச் சாய்ந்தாள் கவிதா!

அவள் நினைத்தது போலவே அவளை அப்படியே அரவணைத்துக் கொண்டான் அவன்.



9

கவிதாவுக்கு நினைவுக்கு வந்தபோது முற்றிலும் புதிய சூழ்நிலையாயிருந்தது. யார் மேல் மோதி அடைக்கலம் தேடியவள் போல் அவன் கைகளில் சரிந்தாளோ அவன் தான் அவளையே உற்றுப் பார்த்தவாறு அவளது படுக்கைக்கு முன் நின்று கொண்டிருந்தான்.

மெல்ல அவள் எழுந்ததும் தயாராயிருந்த சூடான தேநீரை அவள் முன் நீட்டினான்.

''நா.. நான்.. எ.. எங்கு.. இருக்கிறேன்...'' திக்கித் திணறி வாய் குழறி கேட்டாள்.



அவன் புன்னகைத்தான்.

''பயப்படாதே. பாதுகாப்பாய் என்னுடைய அறையில்தான் இருக்கிறாய். நீ தங்கியிருந்த ரூமிற்கு எதிர் ரூம்தான் இது..''

''அவன்.. அவன்..''

அவள் மறுபடியும் வார்த்தைகளால்.. திணற.. அவன் உதவிக்கு வந்தான்.

''ஓ.. உன்னை வில்லன் போல் துரத்தி வந்தானே.. அவனா? அவனை நன்கு அடித்து துவைத்தாயிற்று.. லாட்ஜ் ஊழியர்களும் எனக்கு உதவி செய்ய அவனை ஒரு வழி பண்ணி விட்டேன்... அடிக்கு பயந்து ஓடியே விட்டான்..''

'நன்கு வேண்டும் அவனுக்கு!'

அவள் பற்களை கடித்து ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள்.

''ம்.ம்.. குடி..''

மெல்ல அவன் கொடுத்த தேநீரைப் பருகினாள்.

குடித்து முடித்து தன்னை முழுமையாய் ஆசுவாசப்படுத்திக் கொண்ட போதுதான் கவிதா அவனை நிமிர்ந்து முழுமையாய்ப் பார்த்தாள்.

அண்ணாந்து பார்க்கும் உயரத்தில், கறுத்தடர்ந்த சிகையுடன் மாநிறத்தில் கம்பீரமும் கவர்ச்சியுமாய் இருந்தான். அவனது பளபளப்பான முகத்தில் கருணையும் ஒரு வித சாந்தமும் நிலவியது அவளுக்கு நிம்மதியைத் தந்தது.

நிதானமாய் அவள் முன் வந்து கைகளைக் கட்டிக் கொண்டான். மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியபடி அகன்ற

தோளும் உயரமுமாய் அவன் நின்ற விதம் மிடுக்கான கிரேக்க சிலை வீரனை நினைவுபடுத்தியது.

''யாரவன்?'' என்றான் அவன் மிருதுவான குரலில்.

என்ன ஒரு அசந்தர்ப்பமான கேள்வி! என்ன சொல்வாள்? அவனைப் போய் காதலன் என்றா?

''அவன்.. அவன்..'' என்றவளுக்கு நடந்ததெல்லாம் திரும்பவும் நினைவுக்கு வந்து நெஞ்சை அடைத்தது.

பற்களின் அழுத்தம் உதடுகளின் நடுக்கத்தை நிறுத்திய போதும் விழிகளில் பெரிய நீர்மணிகள் திரளுவதையும் பொலபொலவென கைகளில் விழுந்து சிதறுவதையும் அவளால் தடுக்க முடியவில்லை.

முன்பின் தெரியாத அந்நியன் முன்னிலையில் நடந்தது போதாதென்று கண்ணீர் வேறு விட்டு கேவலப்பட வேண்டுமா? என்ற நினைப்பும் அவமானமாய் ஓடியது.

அவளது அழுகையை பொருட்படுத்தாதவன் போல் அவன் கேள்விகளைத் தொடர்ந்தான்.

''காதலன் என்று நினைக்கிறேன்..''

அவள் சங்கடமாய் தலையசைத்தாள்.

''கல்லூரிப் படிப்பு.. பழக்கம்... காதல் வீட்டில்.. எதிர்ப்பு கல்யாண ஆசையில் ஓடி வந்தாயிற்று அப்படித்தானே?''

மறுபடியும் அவள் தலையாட்டினாள்.

அவன் கண்களில் ஏளனம் கூடியது.

''வந்த இடத்தில் காதலன், காமுகனாய் மாறி விட்டான். நீ செய்வதறியாமல் திகைத்து விட்டாய்..''



எவ்வளவு துல்லியமாய் நேரில் பார்த்தது போல் எல்லா வற்றையும் சொல்லிவிட்டான்! அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு மூச்சடைத்தது. அவனோ கணீர்க் குரலோடு தொடர்ந்தான்.

''உன் பெற்றோருக்குத் தெரியாமல்தானே நீ வந்திருக் கிறாய்? உன்னைக் காணாமல் துடித்துக் கொண்டிருப்பார்கள் தானே?''

மறுபடியும் அவளுக்கு சுருக்கென உரைத்தது. தந்தையின் அப்பழுக்கற்ற முகம், அவள் இதுநாள் வரை அவளிடம் காட்டிய பரிவு அளவு கடந்த பாசம் எல்லாம் நினைவுகளில் பீறிட்டுக் கிளம்பியது.

மறுபடியும் கண்கள்... நனைய.. தாரை தாரையாய் கண்ணீர் வழிந்தோடியது.

விம்மலும் அழுகையுமாய் பதில் சொல்ல முடியாமல் திணறினாள் அவள்.

அவளது அழுகை இம்முறை அவனை எரிச்சல்படுத்தி யிருக்க வேண்டும்.

''ஷ்..''

வாயில் விரல் வைத்து மிரட்டினான்.

''முதலில் அழுகையை நிறுத்து. எவ்வளவு நேரம்தான் இப்படி அழப் போகிறாய்?''

கடுமை தொனிக்க அவன் குரல் ஒலித்ததும் சட்டென கிளிப்பிள்ளை போல் அவள் அழுகையை நிறுத்தினாள்.

அவன் சட்டென நடந்து பிளாஸ்கில் இருந்து குளிர் நீரையெடுத்து கிளாஸில் ஊற்றி அவள் நடுங்கும் கைகளில் திணித்தான்.

"முதலில் இதைக் குடி.."

தண்ணீரை ஒரு சொட்டு விடாமல் குடித்து விட்டு கிளாஸை மேஜைமேல் வைத்தாள். விழிநீரின் வேகம், அழவேண்டும் என்ற எண்ணம் அறவே அவளை விட்டு விலகியிருந்தது. நிமிர்ந்தபோது எதிர் கண்ணாடியில் முகம் தெரிந்தது.

அழுது வடிந்த பரிதாபமான முகம்!

அவளுக்கே அதைப் பார்க்க சகிக்கவில்லை.

திரும்பி பாத்ரூமைப் பார்த்தாள். அவனது அனுமதிக்காக அவனைப் பார்த்தாள்.

அவன் பார்வையாலே அவளுக்கு அனுமதி கொடுத்தான்.

விடுவிடுவென நடந்து பாத்ரூமினுள் நுழைந்து கொண் டாள். குழாயினைத் திருகி பூந்துவாலையால் சிதறிய தண் ணீரை முகம் முழுக்க விசிறினாள். மீண்டும் நிலைமையை எண்ணி கண்கள் கரிக்கத் தொடங்கவும் அவசர அவசரமாய் தண்ணீரை முகத்தில் அடித்து கண்களைக் கழுவினாள்.

அழுகை ஓரளவு மட்டுப்பட்டிருந்தது.

ஓரளவு தன்னை நிதானப்படுத்திக் கொண்டு அவள் வெளிவந்தபோது அவன் தயாராய் வைத்திருந்த வெண்ணிற டவலை நீட்டினான்.

மறு பேச்சில்லாமல் வாங்கி முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.



அவனது எல்லா கேள்விகளுக்கும் இப்போது தயாரானவள் போல் நடுநாயகமான சேரில் அமர்ந்து கொண்டாள்.

பிரச்சினை தலைக்கு மேல் தலை விரித்து ஆட ஆரம்பித் தாயிற்று. இனி அழுதோ அஞ்சி நடுங்கியோ பயனில்லை... எதுவானாலும் எதிர் கொள்ள வேண்டியதுதான் என்பதுபோல் தலை நிமிர உட்கார்ந்து கொண்டாள்.

அவனும் அவளது நிலைமையை உணர்ந்தவன் போல் திரும்பவும் கேள்விகளை ஆரம்பித்தான்.

"உன் பெற்றோர் பற்றி சொல்கிறாயா?" என்றான்.

"தந்தை மட்டும்தான். தில்லைநாதர் தமிழாசிரியர்.."

"தில்லைநாதர்.. தமிழாசிரியர்..." உரக்க மறுபடி சொல்லியவனின் முகத்தில் ஸ்விட்ச் போட்டாற் போல் ஒரு பிரகாசம் ஓடியது.

அதைக் கவனித்த கவிதாவின் முகம் சட்டென கலக்கமானது.

"என்ன உங்களுக்குத் தெரியுமா?" என்றாள் அவள் பயத்துடன்.

அவன் அவள் முகக் குறிப்பையே சிறிது நேரம் உற்றுப் பார்த்தவன். கேள்விப்பட்ட பெயர் போல் இருந்தது. ஆனால் ஞாபகமில்லை. நான் திருநெல்வேலிப் பக்கம் வந்ததும் இல்லையே...! கைகளை விரித்தபடி பேசியவன் மேலே அவளைச் சொல்லும்படி சைகை செய்தான்.

கவிதா தனது கல்லூரி நாடக விழாவில் இருந்து ஆரம்பித்தாள். முதல் முறையாய் நாடக விழாவிற்காக மனோகரைச் சந்தித்ததை அவனுக்கு இணையாய் நடிக்க நேர்ந்ததை விளக்கினாள்.

"என்ன ரோமியோ, ஜூலியட் நாடகமா?'' என வியந்தவன் அவளையே மேலிருந்து கீழ் வரை பார்வையால் வருடி விட்டு ''நீ ஜூலியட்டுக்கு ஏற்றவள்தான். ஆனால் அவனைப் பார்த்தால் ரோமியோ மாதிரியாகவா தெரிகிறது? செலக்ஷன் சரியில்லையே!'' வெண் பற்கள் தெரிய அவன் வசீகரமாய் சிரிப்பதை கவனித்து விட்டு அவள் தொடர்ந்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாக நாடக ரிகர்சலில் ஏற்பட்ட பழக்கம், கொண்டிருந்த காதல் சூழ்நிலை மனோகரனின் வசீகரப் பேச்சு எல்லாம் தன்னைக் காதல் மயக்கத்தில் தள்ளி விட்டதாய் அவள் சொன்னபோது நம்ப முடியாமல் அவன் தலையைச் சிலுப்பிக் கொண்டான்.

"அவ்வளவு பலகீனமானவளா நீ?

ஆணின் ஒரு சின்ன உராய்வில் பழகும் சந்தர்ப்பத்தில் தன்னையே இழந்துவிடக் கூடிய மெல்லிய இதயமா உனக்கு?''

அவன் கேட்டபோது ஓங்கித் தன்னைத்தானே குட்டிக் கொள்ள வேண்டும் போல்தான் அவளுக்கு இருந்தது. அவன் கேட்பது எவ்வளவு நியாயமான கேள்வி!

அவ்வளவு பலகீனமாகத்தானே அவள் இருந்திருக்கிறாள்!

ரோமியோ ஜூலியட் நாடகத்தில் தானும் மனோகரும் வெறும் வேஷம்தான் கொண்டிருக்கிறோம் என்பதைக் கூட உணராதவளாய்த்தானே... அவள் பலஹீனத்தை உணர்ந்து மனோகர் விரித்த காதல் வலையில் எளிதாய் விழுந்திருக் கிறாள்..!

நினைக்கும் போதே நெஞ்சுக்கரிப்பாய் கசப்பாய் உணர்ந்த வைகளை ஒரேயடியாய் அவனிடம் கொட்டித் தீர்த்தாள்.



தங்கை சித்ரா கொடுத்த தைரியம் பற்றி அவள் விளக்கிய போது அவன் அதிசயித்து, "இப்படி ஒரு தங்கையா? பொல்லாத தங்கைதான்! அவளை நான் பார்க்க வேண்டும்...'' என்றான் கேலிப் புன்னகையுடன்!



## 10

கொஞ்ச நேரத்தில் அவள் தனது முழுக் கதையையும் பாவ மன்னிப்பு போல் அவனிடம் கொட்டித் தீர்த்து விட்டாள்.

அவன் பொறுமையாய் எல்லாவற்றையும் கேட்டான். முகத்தில் எந்த ஒரு உணர்ச்சியையும் பிரதிபலிக்காதவனாய் அவளையே பார்த்தான். அவளும் இவனையே இமைக்காது பார்த்தாள்.

இனி என்ன செய்யப் போகிறான்? அவன் என்ன சொல்லப் போகிறான்?

கொஞ்ச நேரம் ஆழ்ந்த மவுனம் அங்கு நிலவியது.

அவனது பரந்த நெற்றி சுருங்க யோசித்தவன் திரும்பி தலைசாய்த்து அவளைப் பார்த்தான்.

"இப்போது என்ன முடிவெடுத்திருக்கிறாய்? என்ன செய்வதாய் உத்தேசம்?'' என்றான்.

அவள் முகத்தில் கவலை மறுபடியும் படர்ந்தது. கலவரமாய் அவனைப் பார்த்தாள்.

"ம்ம்.. பதில் சொல்.."

"எ .. எனக்கு ஒரு வழியும் தோன்றவில்லை.." என்றாள் அவள் தயக்கமாக.

"தோன்றவில்லையா..?" என மறுபடியும் நெற்றி சுருங்க வியந்தவன், "பேசாமல் உன் ஊரில் உன் தந்தையிடம் கொண்டு போய் விட்டு அவரை சமாதானப்படுத்தி.. செய்ய.."

அவன் வார்த்தைகளை முடிப்பதற்குள் மறுத்தாள். "வேண்டாம்.. வேண்டாம்.." என்றாள் பதறியவளாய்.

"வேண்டாமா..?"

"அவர்கள் முகத்தில் முழிக்க.. எனக்கு தைரியம் இல்லை. என் அப்பா மகா கோபக்காரர். இதற்குள் என்னை தலைமுழ்கி யிருப்பார்.." உதடு துடிக்க அவள் சொல்லும்போது அவளது உடம்பே நடுங்கியது.

"அப்படியா?" என அவன் தோள்களை குலுக்க அவள் தொடர்ந்தாள்.

"நான் பெரிய தவறு செய்து விட்டேன். குடும்பத்திற்கு பெரும் அவமானம் ஏற்பட்டு விட்டது. இதே நிலையில் நான் அங்கு சென்றால் ஊரார் கூடி கேலி பேசி என் தங்கையின் வாழ்வும் பாழாகி விடும்.."

"சபாஷ்! அருமையாக யோசிக்கிறாய்.." என அவன் பாராட்டுவதைக் கண்டு அவள் வியந்தபோது பேச்சை நிறுத்தி அவளை உற்றுப் பார்த்தவன், "இந்த யோசிப்பில் கால் பங்கையாவது நீ முன்பே யோசித்திருந்தால் இந்த நிலைமை உனக்கு ஏற்பட்டிருக்குமா?" என்றான்.

அவள் மறுபடியும் தவித்து ஊமையானாள்.



அவன் சொல்வது நியாயம்தானே?

மனோகரை மலை போல் நம்பினாளே? கொஞ்சமாவது எதிர் விளைவுகளை யோசித்தாளா? பூம் பூம் மாடாய் அவன் சொன்னதற்கெல்லாம் போயிருக்கிறாளே!

அவளை மேலும் சங்கடப்படுத்தாதவன் போல் அவன் நேரிடையாய் விஷயத்திற்கு வந்தான்.

"சரி, இப்பொழுது என்ன செய்யப் போகிறாய் அதைச் சொல்!"

அவள் திகைத்தாள்.

என்ன பதில் சொல்வது!

பேந்தப் பேந்த விழிப்பது தவிர அவளால் எந்த ஒரு பதிலையும் சொல்ல முடியவில்லையே!

என்னால் ஒன்றையும் யோசிக்க முடியவில்லை. ஒரு முடிவிற்கும் வர முடியவில்லை!

அவள் இயலாமையை எடுத்துச் சொல்லி அவனை பரிதாபமாய்ப் பார்த்தாள்.

அவன் விடாது அவளை கூர்ந்து பார்த்தான்.

"என்ன அப்படி பார்க்கிறாய்?"

"பேசாமல் செத்துவிடலாம் போல் இருக்கிறது. செத்து விடட்டுமா?"

யோசனை கேட்பதுபோல் நிஜமாகவே கேட்டாள் அவள்.

"அதுசரி, செய்ய வேண்டியதுதான். நல்ல பாழுங் கிணறாய்ப் பார்த்து குதித்து விட்டால், எல்லாப் பிரச்சனையும்

தீர்ந்து விடுமே!'' கேலியாய் அவன் குரல் ஒலித்தது. கண்டு திடுக்கிட்டவன், அவன் அடக்க முடியாமல் சிரிப்பது கண்டு அதிரத்தான் செய்தாள்.

சிரிப்பை நிறுத்தி மறுகணமே சீரியஸானவன், ''கொஞ்சம் யோசித்துப் பார். நீ பிறந்தது இப்படி யாரையோ நம்பி வந்து ஏமாந்து கடைசியில் ஒரு பாழுங்கிணற்றில் குதிக்கத்தானா..? யோசி!'' என்றான்.

அவன் கேள்வி நியாயமாகத்தான் இருந்தது.

அவள் பிறந்து வளர்ந்தது... இப்படியொரு தப்பு செய்து பாழுங்கிணற்றில் குதிக்கவா? கோழையாய் தற்கொலை செய்து கொள்ளவா?

அவளுக்குள் உள்ளுக்குள் இருந்த வீராப்பு விழித்துக் கொண்டது. நிமிர்ந்து கொண்டாள். எப்படியாவது முயற்சி செய்தால் எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடலாம் என்ற நம்பிக்கை கூட அவளுள் துளிர்த்தது.

அவளது மன நிலையை அறிந்தவன் போல் அவன் அடுத்த கேள்வியை வீசினான்.

''பேசாமல் என்னுடன் வருகிறாயா?'' என்றான்.

அவள் நிமிர்ந்து ஒரிரு கணம் இமையாமல் அவனையே உற்றுப் பார்த்தாள்.

''வருகிறேன்'' என்றாள்.





## 11

அவன் வருகிறாயா? என்று கேட்டதும் நிமிர்ந்து அவனையே உற்றுப் பார்த்தாள்.

சங்க இலக்கியத்தில் அவள் படித்த சோழ நாட்டு மன்னன் ஏனாதி திருக்கள்ளி பற்றிய வர்ணனைதான் அவள் ஞாபகத்தில் ஓடியது.

''ஏனாதி திருக்கள்ளி எதிரிகளை அச்சுறுத்தும் நீண்ட உருவத்தை உடையவனாம். விரிந்த முகமும், பரந்த நெற்றியும், பகைவரை மட்டும் அச்சுறுத்தும் பெரிய கண்களும், நீண்ட மூக்கும், அடர்ந்து காணப்படும் முறுக்குண்ட மீசையும் இரண்டு கருங்குன்றுகளை தாங்கி நின்றாற் போல் தோள்களையும், அடர்ந்த மயிர்களையுடைய மார்பையும், செந்நிற மலை போல் விளங்கும் பருத்த உடலையும் ஒருசேர பெற்றவனாம் திருக்கள்ளி. அவன் போர்க்கோலம் பூண்டு புரவி மீதமர்ந்து வருவானாயின் அது பார்ப்பதற்கு அரிய கண் கொள்ளாக் காட்சியாம்!

அவன் அப்படி வரும்போது பார்க்கும் அவனது காந்தக் கண்கள் எதிர்ப்படும். மருண்ட விழி கன்னியரின் உள்ளத்தை எல்லாம் கொள்ளை கொண்டு கசக்கிப் பிழியுமாம். ஒவ்வொரு பெண்ணின் இதயக் கதவையும் தட்டி, ''என்னுடன் வருகிறாயா?'' என்று கேளாமல் கேட்டு இம்சை செய்யுமாம்.

அந்த இம்சையைத் தாங்க முடியாமல் எதிர்ப்படும் பருவ மங்கையர், ''நான் வருகிறேன்.. வருகிறேன்..'' என தாங்களாக மயக்கத்தில் கூறி அவனைத் திகைப்படைய வைப்பார்களாம்.

அதுபோல்தான் கவிதா, ''என்னுடன் வருகிறாயா?'' என்று அவன் கேட்டதும் சற்றும் யோசியாமல் ''வருகிறேன்..'' என்றாள்.

அவள் சம்மதத்தைக் கேட்டதும் அவன் சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

அவனது சிரிப்பு ஏளனமாய் மாறிக் கொண்டிருப்பதைக் கண்டு கவிதா திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள்.

''இன்னமும் நீ திருந்தவில்லை..'' என்றான் அவன் அமைதியாய் சிரிப்பை நிறுத்தியபடி.

புரியாமல் விழித்தாள் அவள்.

''இப்போதுதான்.. குழியில் விழப் போய் எழுந்து வந்திருக் கின்றாய்... அதற்குள் மறுபடியும்.. குழியில் விழ தயாராகி விட்டாயா..?''

''நீங்கள் சொல்வது புரியவில்லை..'' என்றாள் அவள் குழப்பமான குரலில்.

''புரியும்படியே சொல்கிறேன்... முதலில் என் பெயர் என்ன? அதைச் சொல்!'' என்றான் அவன் மிடுக்காய்.

அவள் திருதிருவென விழிக்கத்தான் செய்தாள். அவன் இதுவரை எங்கே அவனது பெயரைச் சொன்னான்? இல்லை அவள்தான் கேட்டாளா?

''தெரியாது..'' என்று விழித்தவளை பிடித்துக் கொண்டான் அவன்.



''பார்... என் பெயர் கூட தெரியாது. நான் கூப்பிட்டதும் வருகிறேன்'' என்று தலையாட்டுகிறாய். இப்படி எளிதில் யாரிடமும் ஏமாந்து விடும் சிறுபிள்ளைத்தனமா உனக்கு? இன்னமும் நீ திருந்தவில்லையே..!'' என்றான் பொய்க் கோபத்துடன்.

''உங்களிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என்னைக் காப்பாற்றிய நல்லவர் நீங்கள். என்னைப் பொறுத்தவரையில் உங்கள் பெயர் கூட நல்லவர்தான்!'' என்றாள் சிரிப்பாய்.

''ஓஹோ..!''

அவன் தோள்களை சிலுப்பிக் கொண்டான்.

கவிதா ஞாபகம் வந்தவளாய், ''இப்போது உங்கள் பெயரைச் சொல்லலாமே?'' என்றாள்.

அவன் திரும்பி நிதானமாய் அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''என் பெயர் சத்தியநாதன். சுருக்கமாய் சத்யன், போதுமா?'' என்றான் இதழ்களில் குறுஞ்சிரிப்பு படர. இருவரும் கிளம்பினார்கள்.

* * *

அதன்பின் சத்யன் தன்னைப் பற்றிய விபரங்களை விளக்கினான்.

''சொந்த ஊரான பெங்களூரில் சொந்தமாக பேக்டரி வைத்திருக்கிறேன்...'' என்றான்.

''பேக்டரியா?'' என்றாள் அவள்.

''ஆமாம். இரு சக்கர வாகனங்களுக்கு உதிரிப் பாகங்கள் தயாரித்துக் கொடுக்கும் சிறு தொழிற்சாலை. அதற்கான ஆர்டர் பிடிப்பதற்காக மாதம் ஒரு முறை இங்கு சென்னை

வருவது உண்டு. அப்படி இம்முறை வந்த இடத்தில்தான்.. இப்படி..?"

அவன் அத்தோடு பேச்சையும் நிறுத்திக் கொண்டான்.

அவன் தன்னைப் பற்றிய குடும்ப விபரங்களை சொல்வான் என்று எதிர்பார்த்தவளுக்கு அவன் சொல்லாதது ஏமாற்றமாகவே இருந்தது.

நிச்சயம் இவனுக்கென்று ஒரு குடும்பம்.. பெற்றோர்.. தம்பி.. தங்கை.. என நினைத்தவள். ஏன் மனைவி கூட, இருக்கலாமே? என நினைப்பு வர திடுமென ஸ்தம்பித்தாள்.

நிமிர்ந்து அவனது முகத்தையே உற்றுப் பார்த்தாள்.

பளபளப்பான முகம், அடர்ந்த சீகை, உதடு விரியப் புன்முறுவல் எல்லாம் அவன் இளமையை பறைசாற்றியது.

ஒருகணம் அதையே வியந்து பார்த்தவள், நிச்சயம் இவனுக்கு மணமாகியிருக்க வாய்ப்பில்லை.. என தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

அதற்குப் பின் அவள் அதிகம் பேசிக் கொள்ளவில்லை.

வீட்டைப் பற்றி தன்னைப் பற்றி என ஏதேதோ சிந்தனையில் இருந்தாள்.

அவ்வப்போது ஸ்டேஷனில் அவன் வாங்கிக் கொடுத்த பழங்களை பிஸ்கட் வகையறாக்களை உண்ண மறுத்தவள் அவனது வற்புறுத்தலுக்காக கொஞ்சம் சாப்பிட்டாள்.

ஆரஞ்சுப் பழத்தின் இனிமை கூட அவளுக்கு கசப்பாய்த் தான் இருந்தது.



சத்யன் அவள் மனநிலையை அறிந்தவன் போல், "வீணாய் வருத்தப்பட வேண்டாம். வருத்தப்பட்டு ஒன்றும் ஆகப் போவ தில்லையே.." என்று பொதுவாய் சொல்லிவிட்டு விட்டான்.

அவனை அடிக்கடி பார்த்தபோது சுவாரஸ்யமாய் ஆங்கில நாவல் ஒன்றை அவன் படித்துக் கொண்டிருப்பதைக் கவனித்தாள்.

அவன் முகத்தில் ஓடும் சாந்தத்தையும் கம்பீரத்தையும் கவனித்தவளுக்கு வியப்பும், இவன் நம் வாழ்க்கைப் பாதையை சீர்படுத்துவான் என்ற நம்பிக்கையும் துளிர்க்க ஆரம்பித்தது.



## 12

பெங்களூர்.

ஸ்டேஷன் வந்ததும் இருவரும் இறங்கினார்கள்.

முன்னால் விறுவிறுவென பெட்டியுடன் நடந்தவனை அவள் எட்டி நடை போட்டுத்தான் பிடிக்க வேண்டியிருந்தது.

என்ன ஒரு வேகம்... என நினைத்தவள் அவன் முகத்தில் சிறிதும் பயணக் களைப்பு இல்லாமல் புத்துணர்ச்சி ஓடுவது கண்டு வியக்கத்தான் செய்தாள்.

"நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்.." என்றாள் நேற்று இரவு முழுவதும் சிந்தித்து ஞாபகம் வந்தவளாய்.

அவன் திரும்பாமலே நடையின் வேகத்தைக் குறைக்காமலே "என்ன?" என்றான்.

"எதையாவது நான் சாதிக்க வேண்டும். சாதிக்காமல் நான் ஊர் திரும்பப் போவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறேன்!"

"சாதிக்க வேண்டுமா?"

அவன் ஒரு கணம் நின்று அவளை உற்றுப் பார்த்தான்.

அவள் கண்கள் விரிந்து பேசினாள்.

"வீட்டில் எல்லோரும் தலைகுனியும்படி ஒரு காரியத்தைச் செய்து விட்டேன். இனி அவர்கள் தலைநிமிரும்படி என்னை நினைத்து பெருமைப்படும்படி எதையாவது நான் சாதித்தாக வேண்டும்.."

"சபாஷ்.. நல்ல ஞானோதயம்.."

அவன் சிரிக்காவிட்டாலும் அவனது குரலில் ஏளனம் ஓடி சிரிப்பது போலிருந்தது.

"நான் சொல்வது நிஜம்.." என்றாள் உதடுகள் அழுந்த.

"இருக்கட்டுமே..."

"அதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும்.."

"நானா?"

"ஏதாவது வழிகாட்ட வேண்டும்..."

அவள் கேட்டதும் அவன் அப்படியே மௌனமாகி விட்டான். எதையோ தீவிரமாய் சிந்திப்பது போல் கூட தெரிந்தது. அவளும் அவன் எதையாவது சொல்வான் என ஆவலாய் அவனது முகத்தையே உற்றுப் பார்த்தாள்.



"ம்ம்.. பார்ப்போம்.." என்றபடி அவன் ஒரு டாக்ஸி பிடிப்பதில் மும்முரமானான்.

டாக்ஸி பிடித்து இருவரும் ஏறிக் கொண்டார்கள்.

பதினைந்து நிமிடத்தில் கார் மரங்கள் சூழ்ந்த ஒரு பெரிய பங்களா முன் நின்றது.

"இதுதான் எனது வீடு."

உள்ளே அவளை அழைத்துச் சென்றான்.

கேட்டைத் தாண்டியதும், முன்புறம் முழுவதும் அழகான புல்வெளிகள், குரோட்டன்ஸ், மணிப்ளாண்ட், கொடிமல்லி, இருவாட்சி, மனோரஞ்சிதம் என பல வகையான செடிகள், கண்களைக் கவரும் வண்ணப் பூக்கள்..

அவள் பிரமித்தபடி நடந்தாள்.

அவன் வீட்டினரைப் பற்றி சரியாகச் சொல்லவில்லையே.. யார்.. யார்.. இருப்பார்கள்..?

அவளுக்கும் பார்க்கும் ஆவல் அதிகரித்தது.

உள்ளே நுழைந்ததும், பணியாள் ஓடி வந்து பெட்டிகளை வாங்கிக் கொண்டு போனான்.

அவன் பின்னாலே கனிவு ததும்பும் முகத்துடன் அன்பே உருவான அம்மாள், சத்யனின் தாய் ரங்கமணி அம்மாள்!

"வந்து விட்டாயா? நான் ஸ்டேஷனுக்கு வர வேண்டும் என நினைத்தேன்.." புன்னகை பொங்க சொன்னவள் அந்த புன்சிரிப்பு கொஞ்சமும் மாறாமல் கவிதாவைப் பார்த்தாள்.

யாரோ ஒருத்தி புதிதாய் வந்திருக்கிறாள் என்று எண்ணாமல்.. ஆதரவாய் கவிதாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"இது யாரப்பா?" என்றாள் அதே கனிவுடன்.

"அம்மா, இது கவிதா. விவரம் பிறகு சொல்கிறேன். கொஞ்ச நாள் நம் வீட்டில் தங்க வைக்க வேண்டும். இருக்கட்டுமா அம்மா!"

அனுமதி கேட்பது போல் சத்யன் கேட்டான்.

''தாராளமாகப்பா, எனக்கும் பேச்சுத் துணைக்கு ஆள் இல்லாமல் ரொம்பவும் சிரமப்படுகிறேன்..'' என்றபடி ரங்கமணி அம்மாள் முகம் மலர, "நீ .. வாம்மா.." என கவிதாவை உள்ளே அழைத்துப் போனாள்.

மகனின் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து அவள் பற்றி மேற்கொண்டு எதுவும் ரங்கமணி அம்மாள் கேட்காதது கவிதாவை ஆச்சரியப்படுத்தியது.

அவளுக்கு அமைதியான வீட்டுச் சூழ்நிலையும், அன்பொழுகும் ரங்கமணி அம்மாளையும் ரொம்பவும் பிடித்துப் போனது. இதுவரை தாய்ப் பாசத்தை உணர்ந்து அனுபவித்தி ராதவள் இப்போது முதல் முறையாக உணர்ந்து திக்கு முக்காடத்தான் செய்தாள்.

"கொஞ்சமும் ஓய்வெடுத்துக் கொள்ளம்மா, பிறகு வீட்டைச் சுற்றிக் காட்டுகிறேன்..'' என்றவள் அன்று மாலையே கவிதா விற்கு வீடு முழுவதும் சுற்றிக் காட்டினாள். வீட்டின் பின்புறம் பெரும் பகுதியை விஸ்தாரமான தோட்டம் ஆக்ரமித்திருந்தது.

"இதுதான் எனது உலகம். மாலை வேளைகளில் சேரை எடுத்துப் போட்டு இங்கு உட்கார்ந்து விட்டால்.. என்னையே மறந்து விடுவேன்..'' என்று ரங்கமணி அம்மாள் சொன்னபோது அது எவ்வளவு உண்மை என்று தோட்டத்தைப் பார்த்ததும் கவிதாவிற்குப் புரிந்தது.



மாலைச் சூரியனின் தங்க நிற கதிர்களின் மினுமினுப்போடு தோட்டம் மிக அழகாக தோற்றம் அளித்தது.

நுழைந்ததுமே மிக இனிமையான நறுமணம் மனதை கவ்வியது. தோட்டம் முழுக்க வகை வகையான பூஞ்செடிகள்... கொடிமல்லி, இருவாட்சி, சாதிப்பூ, மனோரஞ்சிதம் என வகை, வகையான பூக்கள், அழகான இளஞ்சிவப்பு ரோஜாக்கள்...

போதாதென்று பந்தலிட்டு வெண்ணிற பூக்களை படர விட்டிருந்தது. பெரிய செண்பக மரத்தில் பொன் மலர்கள் பூத்துக் குலுங்கியது எல்லாமே கவிதாவை ஒரு கணம் இயற்கையில் மெய் மறக்கச் செய்தது.

ரொம்பவும் ரஸித்தவளாய் ஆழ்ந்த மூச்சுகளாக எடுத்து அந்த நறுமணங்களை சுவாசமாய் அனுபவித்தாள். அந்த இயற்கை ரஸிப்பில் கவலைகள் எல்லாம் மறைந்து பெரும் நிம்மதி ஏற்படுவதையும் உணர்ந்தாள்.



## 13

மறுநாள் பேச்சோடு பேச்சாய் ரங்கமணி அம்மாள் சொன்னதைக் கேட்டு கவிதா அதிரத்தான் செய்தாள்.

''என்னம்மா, சொல்கிறீர்கள்?'' என்றாள் முழுவதும் திடுக்கிட்டவளாய்.

ரங்கமணி சோகமாய் ஒரு புன்னகை செய்தாள்.

''எல்லாம் அந்தக் காதல் படுத்தும் பாடு..'' என்றாள் விட்டேற்றியாய்.

''காதலா?''

கவிதா உள்ள குறுகுறுப்பை கொஞ்சமும் வெளிக்காட்டாது கேட்டாள்.

''ஆமாம், சத்யன் ஒரு பெண்ணை விழுந்து விழுந்து காதலித்தான். அவளும் இவனைக் காதலித்தாள். கடைசியில் என்ன நேர்ந்ததோ.. அவள் இவனை மறந்துவிட்டு வேறொரு வனை காதலிக்க ஆரம்பித்து விட்டாள். இவனோ இன்னமும் அவளை மறக்க முடியாமல் தினம் அவளுக்காக உருகிக் கொண்டிருக்கிறான்..''

கவிதாவால் அதைக் கொஞ்சமும் நம்ப முடியவில்லை.

''என்ன நீங்கள் சொல்வது நிஜமா? என்னிடம் சத்யன் சொல்லவே இல்லையே.''

வாய் பிளக்க அதிசயமாய் கேட்டவளை ஆச்சரியமாகவே பார்த்தாள் ரங்கமணி. ''உனக்கு அதிசயமாத்தான் இருக்கும். ஊர் உலகத்தில் இப்படி நடக்குமா? யாராவது காதலித்து விட்டு விட்டுப் போன பொண்ணை நினைத்து இப்படி உருகுவார்களா? இவன் உருகுகிறானே!''

ரங்கமணி சொன்னதிலிருந்து அவளுக்கிருந்த எரிச்சலை யும், அவளது உண்மையான வருத்தத்தையும் புரிந்து கொண்டாள் கவிதா.

அவளுக்கும் சத்யன் இன்னொரு பெண்ணை காதலித்ததை அவளுக்காக இன்னமும் உருகுவதை நினைத்து எரிச்சல் வந்தாலும், அந்தப் பெண் யார்..? அவர்களுக்கிடையே என்ன நடந்தது என்பதை தெரிந்து கொள்ளும் ஆர்வமும் ஏற்பட்டது.



ஆனாலும் ரங்கமணி அம்மாளிடம் இது பற்றி மேற் கொண்டு கேட்பது நல்லதல்ல.. என நினைத்தவளாய் அந்தப் பேச்சை அத்தோடு விட்டுவிட்டாள் கவிதா.

அதற்குப் பின் பேச்சை மாற்ற 'அன்பு இல்லம்' பற்றி பேச ஆரம்பித்தாள். அன்பு இல்லம் சத்யன் சொன்ன விஷயம் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க நினைத்தவளை, அன்பு அனாதை இல்லம் ஒன்றை உருவாக்கி சாதித்து காட்ட சத்யன் சொல்லியிருந்தான்.

ரங்கமணி அம்மாளுக்கு உற்சாகம் வந்து கொண்டது.

''அன்பு இல்லம்.. எனது நெடுநாளைய கனவு சரியான ஆள் இல்லாமல் திணறிக் கொண்டிருந்தேன். இப்போது நீ வந்து விட்டாய். உன் உதவியுடன் என் கனவையெல்லாம் நனவாக்கி விடலாம் என்ற நம்பிக்கையும் வந்து விட்டதம்மா!'' என்றாள் நெகிழ்ந்து போனவளாய்.

இருவரும் மணிக் கணக்காய் பேச ஆரம்பித்தனர்.

அன்பு இல்லத்தில் சிறுவர், ஆசிரமம் ஒன்றையமைத்து கவனிப்பாரற்ற அனாதை சிறுவர்களை தத்து எடுத்து வளர்ப்பது... படிக்க வைப்பது, ஆதரவற்ற, முதியோர்களை கவனிப்பதற்காக முதியோர் இல்லம் ஒன்றை அமைப்பது.. என யோசித்து வரிசையாய் திட்டம் தீட்டினார்.

அன்றைய மாலை பேச்சின் போது சத்யனும் அவர்களுடன் வந்து கலந்து கொண்டான்.

அன்பு இல்லத்திற்கான கட்டுமானப் பணிகளை உடனே ஆரம்பித்து விடலாம்... என்றான்.

''இடம் தயாராய் இருக்கிறதா?'' என்றாள் கவிதா ஆவல் மிகுதியாய்.

''நம் பண்ணைத் தோட்டம் ஒன்று பராமரிப்பில்லாமல் சும்மாதான் கிடக்கிறது. அங்குதான் இல்லம் கட்டப் போகிறோம்..''

அவள் விழிப்பதைப் பார்த்து, ''நாளை உன்னை கூட்டி போய் காட்டுகிறேன்.. அப்போது புரியும்..'' என்றான்.

''ப்ராஜக்ட் எல்லாம் ரெடியாயிற்று. நல்லநாளாய்ப் பார்த்து காங்கிரீட். அஸ்திவாரம் போட்டு கட்டிடத்தை எழுப்பி விட வேண்டியதுதான்.. எப்படியும் பத்து இலட்சம் வரை செலவாகும் என நினைக்கிறேன்..''

''பத்து லட்சமா?''

வாய் பிளந்தவளை சிரிப்புடன் நோக்கினான் சத்யன்.

''நான் சொல்வது குறைந்தபட்ச தொகை கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து விட்டால்.. நாளுக்கு நாள் எகிறும் விலைவாசியில் தலையைப் பிய்த்துக் கொள்ளவேண்டியது தான். நான் இதற்கென்று சில லட்சங்களை ஒதுக்கியிருக் கிறேன். மீதிச் செலவுகளுக்கு டோனர்களை நம்பியிருக் கிறேன்..''

''டோனர்களா?''

''ஆம்.. பொதுநல நிதி நிறுவனங்கள்.. மற்றும் சில சமூக சேவக அமைப்புகள், டோனர்களாய் நமக்கு பண உதவி செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.எப்படியும் கிடைத்துவிடும். அப்புறம் கவிதா..''

''சொல்லுங்கள்..''

''நீ செய்ய வேண்டியது முக்கியமான ஒன்று. நம் ஏரியாவில் மணல் திட்டு என்ற சேரிப் பகுதி இருக்கிறது. அங்குதான்



நிறைய அனாதைகளாய் ஆதரவற்ற சிறுவர் சிறுமியர்கள் உண்ணுவதற்கோ, படிப்பதற்கோ, வசதியில்லாமல், தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீ.. அங்கு சென்று ஆதரவற்றவர்களை தேடிப் பிடித்து, நம் அன்பு இல்லத்தை உருவாக்க வேண்டும்..''

''கண்டிப்பாகச் செய்கிறேன்..'' என்றாள் கவிதா உறுதியான குரலில்.

கவிதா சொன்னதோடு மட்டுமல்லாமல் செயலிலும் இறங்கி விட்டாள்.

மறுநாளே மணல் திட்டு சேரிப்பகுதிக்கு சென்றாள். அங்குள்ள மக்களின் வறுமையான கோலத்தைப் பார்த்து அவளுக்கு கண்ணீரே வந்துவிட்டது.

உண்ண உணவின்றி, உடுத்த உடையின்றி, பசியும் பட்டினியுமாக எத்தனை பேர்? பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதில் பிச்சைக்காக தட்டை ஏந்தும் சிறுவர் கூட்டம்தான் எத்தனை?

வேதனையுடன் எல்லாவற்றையும் பார்த்தவள், காலம் காலமாய் விடியலைக் காண முடியாமல் அவர்கள் தவிப்பதைக் கண்டு துடிக்கத்தான் செய்தாள்.

இவர்களை அரவணைக்க ஒரு அன்பு இல்லம் போதாது, நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அல்லவா தேவைப்படும்?

ஒருகணம் மலைத்துவிட்டு தனது வேலைகளை நம்பிக்கை யோடு தொடங்கினாள்.

கொண்டு வந்திருந்த குறிப்பேட்டில் ஆதரவற்றவர்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்தாள்.

அவர்களுக்கு தேவையான பராமரிப்பு செலவுகள், படிப்பதற்கு ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலைகள் பற்றியெல்லாம் விரிவாய் குறிப்பெழுதி பெரிய பட்டியல் ஒன்று தயாரித்தாள்.

தான் சேகரித்த விபரங்கள் முழுவதும் அடங்கிய பைலை சத்யன் முன் மறுவாரம் அவள் நீட்டியபோது அவன் அசந்துதான் போனான்!



## 14

மறுவாரம்... சத்யன் நகரின் உயர்ரக ஹோட்டல் ஒன்றுக்கு அவளை அழைத்துச் சென்றிருந்தான். மேல்நாட்டு மோகமும், பணக்காரத்தனமும் நிரம்பியிருந்த அந்த ரெஸ்ட்டாரண்டில் வந்திருந்தவர்களின் அரைகுறை உடைகளைப் பார்த்த கவிதா முகம் சுழிக்கத்தான் செய்தாள்.

சத்யன் அவளை நேராய் உணவருந்தும் ஹாலுக்கு எதிராயிருந்த மற்றோர் பெரிய ஹாலுக்கு அழைத்துச் சென்றான்.

''இதுதான் டிஸ்கோத்தே ஹால். இங்குதான் அவள் வருவாள்..'' என்றான்.

''அவள் வருவாளா? யாரைச் சொல்கிறீர்கள்?'' என்றாள் கவிதா முழுதும் திடுக்கிட்டவளாய்.



''புரியவில்லை?''

''புரியவில்லை..!''

''நீ.. கேட்டாயே... காதல் பற்றி.. நர்மதா... என்னுடைய நர்மதா.. பற்றி?''

நர்மதாவின் பெயரை உச்சரிக்கையில் சத்யனின் முகத்தில் பரவசம் ஒன்று ஓடுவதைக் கண்டு திடுக்கிடத்தான் செய்தாள்.

இப்பொழுது அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

நர்மதாவைத் தனக்குக் காட்டத்தான் மெனக்கெட்டு ஹோட்டலுக்கு அழைத்து அவன் கூட்டி வந்திருக்கிறான்.

மற்றபடி.. நிஜமாக அவளுடன் ஹோட்டல் போக அவன் எண்ணவில்லை.

அந்த நினைப்பு அவளையறியாமல் எழுந்து எரிச்சலைத் தந்தாலும்... அந்த நர்மதா யார்? எப்படித்தான் இருப்பாள்? என்று பார்க்கும் ஆவலும் கவிதாவுக்கு ஏற்பட்டது.

''அப்படி என்ன பேரழகியா அவள்..?''

''நீயே பாரேன்... நர்மதாவைப் பார்த்ததும் அசந்து விடுவாய்..!''

அவள் நினைப்புக்கு ஏற்றாற்போல் ரன்னிங் கமெண்டரி வேறு சத்யன் கொடுத்தான்.

அதற்குப் பின்னும் அவனால் சும்மா இருக்க முடியவில்லை.

ஒருவித பரபரப்புடன் நுழைவாயிலைப் பார்ப்பதும் நர்மதா எங்காவது தென்படுகிறாளா? என்று சுற்றும் முற்றும் பார்வையை அலைய விடுவதுமாய் தவிப்பாகவே இருந்தான்.

அவனது தவிப்பைக் கண்ட கவிதாவிற்கு ஆச்சரியமே பன்மடங்காகியது. காலையிலிருந்து பேக்டரி, வேலை என பொறுப்பாய் இருந்தவன் காதல் என்றதும் இப்படி அடியோடு மாறி விட்டானே? என்ற வியப்பும் கூடியது. கொஞ்ச நேரத்தில் அந்த நர்மதாவும் வர கவிதா நிமிர்ந்து நர்மதாவைப் பார்த்தாள்.

நர்மதா அப்படி ஒன்றும் பேரழகி இல்லையென்றாலும் பியூட்டி பார்லரிலிருந்து நேராய் இங்கு வந்தவள் போல் அதீத மேக்கப் சமாச்சாரங்களில் ஆர்வம் காட்டியிருந்தாள். புருவம், உதடு, கன்னச் சிவப்பு எல்லாம் செயற்கைகளில் மின்ன, அவள் தனது மாநிறத்தை சிவப்பாக்க அரும்பாடுபட்டிருப்பது தெரிந்தது.

போட்டிருந்த மயில் கழுத்து வண்ண ஆடையில் உடம்பின் வளைவு நெளிவுகள் அப்பட்டமாய் தெரிய விலுக் விலுக் கென்று அலட்டலுடன் அவள் நடந்தபோது - இவளிடம் எதைக் கண்டு சத்யன் மயங்கினான்? என்ற ஆச்சரியமே கவிதாவினுள் ஏற்பட்டது.

அவளுடைய சிரிப்பைப் பார்த்தாயா? பவழ இதழ்களுக்குள் நிலவு விரிவது போல என்ன ஒரு வசீகரச் சிரிப்பு! சத்யன் ரசித்துச் சொன்ன போது கவிதாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது.

''இதுவா.. வசீகரச் சிரிப்பு? பட்டென்று பட்டாணி உடைவது போல் அல்லவா இருக்கிறது!''

அப்போதுதான் கவிதை அதைக் கவனித்தாள்.

சத்யன் சொன்ன நர்மதாவுடன் அவளது கையோடு கை கோர்த்தபடி ஒரு தாடி இளைஞன்!



''அவளது பாய் பிரண்ட் என்று சொல்லிக் கொள்கிறாள். என்னை வெறுப்பேற்ற வேண்டுமென்றே இங்கு கூட்டி வருகிறாள்..'' என விளக்கம் கொடுத்தான் சத்யன்.

''உங்களை வெறுப்பேற்றவா?''

''ஆமாம், கவிதா. இந்த ரெஸ்ட்டாரண்டிற்கு நானும் நர்மதாவும் ஜோடியாய் எத்தனை முறை வந்திருக்கிறோம், தெரியுமா?''

''.....''

''ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை தவறாது இங்கு வருவோம். மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்போம். ம்ம்... எல்லாம் போயிற்று..'' கொஞ்ச நேரம் மௌனித்து விட்டு வெறுமையாய் உதடுகளை பிதுக்கினான் சத்யன்.

''என்னாயிற்று? எதனால் உங்களுக்குள் வெறுப்பு வந்து உண்டாயிற்று?''

கண்களை அகல விரித்து, ஆவலாய்க் கேட்டவளை உற்றுப் பார்த்து விட்டு சத்யன் அமைதியானான்.

''அது பெரிய கதை பிறகு சொல்கிறேன்..''

சொல்லியவனின் கண்கள் மறுபடி நர்மதாவின் பக்கம் பாய்ந்தது.

நர்மதா இதற்குள் அந்தத் தாடிக்காரனுடன் முன்னால் நடந்து ஹாலில் இசைக்கேற்ப நடனமாடிக் கொண்டிருந்த ஜோடி களின் பக்கம் போனாள். அவளும் அவர்களோடு நடனமாட ஆரம்பித்தாள்.

சத்யனைப் போலவே கவிதாவும் அவளை உற்றுப் பார்த்தாள்.

சத்யன் சொல்வது போலவே நர்மதாவின் நடவடிக்கையும் இருந்தது.

அடிக்கொருமுறை நடந்து திரும்பி சத்யனைப் பாரத்துக் கொண்டிருந்தாள். அவன் தன்னை விலகாமல் கவனிக்கிறானா என்பதை உறுதி செய்து கொண்டாள்.

அப்படி சத்யன் பார்க்கும் நேரமெல்லாம் வேண்டுமென்றே அந்த தாடிக்காரனுடன் ஆடியபடி நெருக்கமாய் இருப்பது போல் காட்டிக் கொண்டாள். இது என்ன வகை காதலோ..? என கவிதா வியந்து கொண்டிருக்கும் போதே சத்யன் மெல்ல அவள் கைகளை அழுத்தினான்.

''கவிதா நீ ஒரு உதவி செய்ய வேண்டும்..''

''உதவியா?''

''வழக்கமாய் இங்கு அவள்தான் அந்தத் தாடிக்காரனுடன் வந்து என்னை வெறுப்பேற்றுவாள். ஆனால், இம்முறை நான் அவளை வெறுப்பேற்றப் போகிறேன்.. அதற்கு உன் உதவி வேண்டும்..''

''வெறுப்பேற்ற.. என்... உ...உதவியா... எ.. எப்படி?'' தடுமாறலுடன் கேட்டு விழித்தவளுக்கு பதில் சொல்லாமல் சத்யன் எழுந்து அவள் கரங்களைப் பற்றி தன் பக்கம் இழுத்தான். அவளை அப்படியே தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான் சத்யன்.

கவிதா இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

சத்யன் அவளை இழுத்து அணைத்துப் பிடித்தவாறு ஆட ஆரம்பித்துவிட்டான்.



கவிதாவிற்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. புரிந்ததும் சினமாய் வெகுண்டு விலகப் போனாள்.

ஆனால் சத்யன் அவளை நழுவ விடாமல் அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

போதாக்குறைக்கு... ''ப்ளீஸ்... ப்ளீஸ்.. கவிதா மறுத்து விடாதே.. கொஞ்ச நேரம்தான்.. அந்த நர்மதாவிற்கு சரியான புத்தி புகட்டி விட்டால் போதும்..'' என்ற கெஞ்சல் வேறு.

''ஐயோ, சத்யன் விடுங்கள்.. என்ன இது நாகரிகம்? இன்னொரு பெண்ணுக்கு வெறுப்பேற்ற என்னை அணைத்துக் கொண்டு.. சே!'' அந்த நினைப்பே அமிலமாய் உடம்பை எரிக்க மறுபடியும் திமிறினாள்.

ஆனால் சத்யனின் பிடி இரும்புப் பிடியாய் இருந்தது. சத்யன் தன் பலம் கொண்ட மட்டும் அவளைப் பிடித்திருந் தான். அவனது முகத்தை நிமிர்ந்து பார்த்த கவிதா அதில் தொனித்த கடுமையையும் ஆவேசத்தையும் கண்டு அதிரத்தான் செய்தாள்.

சத்யனின் பார்வையெல்லாம் தூரத்தே இருந்த நர்மதாவின் மீதே இருந்தது. அவளை விட்டு இம்மியும் விலகாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் தாடிக்காரனுடன் இழுத்து அணைத்து ஆடியபோதெல்லாம் அவனும் கவிதாவை அணைத்துக் கொண்டு ஆடினான். நர்மதாவிற்கு வெறுப் பேற்றுவதாய் நினைத்துக் கொண்டான்.

கவிதாவின் நிலைதான் சங்கடமாயிருந்தது.

ஒருகணம் திமிற முடியாதபடி தன்னை வலுவான பிடி பிடித்துக் கொண்டு கெஞ்சும் சத்யனை அவளால் ஒரேயடியாய்

புறக்கணிக்க முடியவில்லை. அந்த நேரம் வேறொரு பெண்ணுக்காக தன்னை அணைத்துக் கொண்டு.. என்ன ஒரு விளையாட்டு..? என்று எழுந்த சீற்றத்தையும் அடக்க முடியவில்லை.

சத்யன் இந்நேரம் அவளது சிறு இடையை தன்னோடு அணைத்து ஏறக்குறைய காதலி போலவே ஆட ஆரம்பித்து விட்டான்.

கவிதா தவிப்பாகவே அவனைப் பார்த்தாள். சத்யனுக்கு எத்தனையோ வகையில் இது இதமாயிருக்கலாம். வலிகள் குறையலாம். வேதனைகள் மறக்கடிக்கலாம்.. ஆனால் அவள் ஒன்றும் உணர்ச்சியற்ற மரப்பாய்ச்சி பொம்மையல்லவே?

உயிரும் உணர்வும் உள்ள பெண் ஆயிற்றே! எதற்கும் ஓர் அளவு உண்டென்று சத்யனுக்குத் தெரியாதா? ஆனால் வாழ்க்கையில் பெரும் அபயக் கரம் நீட்டி ஆதரவளித்திருக்கும் அவனிடம் எதையும் மறுக்கவும், மறுத்துப் பேச முடியாத நிலையில் அல்லவா அவள் இருக்கிறாள்?

ஆனால் சத்யன் தன் காதலை உயிர்ப்பிப்பதற்காக இப்படிச் செய்வது கொஞ்சமும் நாகரிகமாகத் தெரியவில்லையே!

இப்படி காதலிக்காக இன்னொரு பெண்ணுடன் நெருக்கமாக கட்டிப்பிடித்து ஆடுவது வெட்கமாகத் தோன்றவில்லையா சத்யனுக்கு?

கவிதாவினுள் அந்தக் கேள்வி எழுந்தது.





## 15

சத்யனுடன் வெளியே காரில் வரும்போது அதை கேட்டே விட்டாள் கவிதா.

சத்யன் அவளது கேள்விக்கு பதில் சொல்லாமல் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீர்கள்?''

''உனக்கு வேறு ஒன்றுமில்லை. அந்த மூன்று எழுத்து வார்த்தை அது வந்து விட்டது..''

''மூன்று எழுத்து வார்த்தை?''

''ஆமாம்.. பயம்..''

''எனக்கா பயம் என்கிறீர்கள்? தன்னந்தனியாய் வீட்டை விட்டு ஓடி வந்திருக்கிறேன்... என்னிடமா?''

அவன் அவசரமாய் இடைமறித்து, ''அந்தப் பயம் அல்ல வேறு பயம் உனக்கு! என்னிடம் பயம்!''

''உங்களிடம் பயமா? நீங்கள் என்ன புலியா? சிங்கமா? அப்படி நான் பயந்து போக?''

அவள் ஏளனமாக கேட்டதற்கு அவன் நிறுத்தாமல் சிரித்து, ''உன் பயம் வேறு மாதிரி, எங்கே என்னிடம் மயங்கிவிடக் கூடுமோ என்ற பயம், நெருக்கமான சூழ்நிலையில் மனதில் ஏற்படுகிற பயம்!'' என்றான் அவன் ஆணித்தரமாக.

"ஓஹோ.!"

அவள் திடுக்கிட்டுத்தான் போனாள்.

அவனது இந்த வெளிப்படையான பேச்சை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. நெருக்கமான சூழ்நிலை என்கிறானே... அப்படியானால்?

நாடகத்தில் நடிக்கும் போது.. மனோகரிடம் சலனப்பட்டு விட்டதாய் சொன்னதை உணர்த்துகிறானோ? நீ ஆண்கள் முன் பலஹீனமானவள் என கோடிட்டுக் காட்டுகிறானோ?

அவள் சிந்தனையை அறிய அவனுக்கு ஆவலாயிற்று. என்ன யோசிக்கிறாய்? நான் சொன்னது சரிதானே?

"ஆமாம். எல்லோருக்கும் பெரிய மன்மத கொக்கு நினைப்புதான்..!"

"அப்படியானால்.. உனக்கு மனதில் சலனம் இல்லை என்கிறாயா?" என்றான் அவளை மேலும் சீண்டுபவனாய்.

அவளுக்கு எரிச்சல் அதிகமாயிற்று.

"இல்லை.. இல்லை.. இல்லை.." என்று வெடிக்காத குறையாய் கவிதா பேசி சட்டென மௌனமானாள்.

"அப்பாடா!"

இவன் நிம்மதியாய் பெருமூச்சு விட்டான்.

இனி கவலையில்லை. மனதில் உனக்கு சலனம் இல்லை என்று சொல்லிவிட்டாய் எனக்கும் நிம்மதி. அதனால்?"

"அதனால்...?"

அவள் புரியாமல் பார்த்தாள்.



இனி நர்மதா முன் என்னுடன் நீ தாராளமாய் நடிக்கலாம். நெருக்கமாய் நடந்து கொள்ளலாம். உனக்குத்தான் மனதில் சலனம் ஏற்படப் போவதில்லையே?

அவனது வார்த்தைகளுக்கு அவளால் ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் போயிற்று.

இந்த ஒரு பேச்சை கொண்டு வரத்தான் அவளை இப்படி யெல்லாம் சீண்டினானோ? என்றுதான் கவிதாவிற்கு நினைப்பு ஓடியது.

அவன் எதிர்பார்த்தது போலவே நடந்து கொண்டோமோ என்று ஒரு கணம் குழம்பியும் போனாள்.

அவன் ஏதேதோ வார்த்தைகளால் பேசி சுலபமாய் தன்னை ஏமாற்றி விட்டாற் போல் ஓர் உணர்ச்சி உண்டாயிற்று.

ஆனால் மறுகணமே சிலிர்த்துக் கொண்டாள். தான் ஒன்றும் அவ்வளவு முட்டாளில்லை.

அவன் சொல்வது போல் பயம் கியம் ஒன்றும் அவளுக் கில்லை!

அதெல்லாம் மன உறுதி இல்லாதவர்களுக்குதான்.

கவிதாவின் மனசுதான் மரத்துப் போயிற்றே!

அந்தப் பாழாய்ப் போன மனோகரனைக் காதலித்த பாவத்திற்காக அந்த மாதிரியான உணர்வுகளைத்தான் வேரோடு பிடுங்கிப் போட்டு விட்டாளே!

இனி துளிர்க்க வாய்ப்பில்லாத அளவுக்கு மொட்டையாக வும் ஆக்கி விட்டானே!

அதுமட்டுமா?

என்ன திடத்துடன் அப்பாவை எதிர்த்து வீட்டை விட்டு வந்திருக்கிறாள்?

விஷயம் தெரிந்தால்.. குடும்பத்திற்கு எவ்வளவு பெரிய அவமானம்?

யாரும் தலைநிமிர்ந்து நிற்க முடியுமா?

அப்படி தலைநிமிர்ந்து நிற்க வேண்டும்.. பாழாய்ப் போன முள் செடியாகிவிட்ட வாழ்க்கை பூத்துக் குலுங்க வேண்டும்.. பாதையற்ற இருண்ட காட்டில் ஒளியுடன் பாதை கிடைக்க வேண்டும்..

எல்லா பழியையும்... எல்லா களங்கத்தையும் அவள் நீக்க வேண்டும்!

அதற்கு அவள் சாதிக்க வேண்டும்! அன்பு அனாதை இல்லம் உருவாக்குதல் பற்றி மட்டும் சிந்திக்க வேண்டும். வேறு எது பற்றியும் நினைத்தல் கூடாது! தனக்குத்தானே தீர்மானமாய் பேசிக் கொண்டு நிமிர்ந்தபோது.. அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன உறுதி எடுத்தாயிற்றா..?'' என்றான் அவள் மனநிலையைப் படம் பிடித்தவன் போல்.

அவனது குரலும் பார்வையும் ஏற்படுத்திய குழப்பத்தை ஒருவாறு, ஒதுக்கித் தள்ளிவிட்டு மீண்டும் ஒரு சீறலுடன் அவனைப் பார்த்தாள்.

''நான் ஒன்று சொல்லட்டுமா?''

''சொல்லு..''

''விருப்பமில்லாத பெண்ணை ஏன் சுற்றி வருகிறார்கள்? பிடிக்கவில்லை என்றால் அந்தப் பெண்ணை விட்டு விடுவதுதானே?''




''விட்டுவிட்டு...?'' அவள் முடித்த வார்த்தைகளையே கேள்வியாய் கேட்டான்.

வேறு பெண் பின்னால் சுற்ற வேண்டியதுதானே? உங்களுக்குத்தான் காதலை விட்டால் வேறு வேலை வெட்டி இல்லையே!

அவள் இகழ்ச்சியாய்ச் சொன்னதை கொஞ்சமும் பொருட் படுத்தாமல் அவன் சீரியஸானான்.

''நீ சொல்வதைப் பார்த்தால் நர்மதாவை விட்டு விட்டு வேறு ஒரு பெண்ணை நான் காதலிக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் இப்போதைக்கு எனக்குத் தெரிந்த வேறு பெண் நீ ஒருத்திதான். உன்னைக் காதலிக்கட்டுமா?'' என்றான் சத்யன் கேலிபோல் ஆனால் ஆர்வம் பொங்க.

''இனி காதல் என்ற பேச்சுக்கே என் வாழ்வில் இடமில்லை!'' என்றாள் கவிதா உறுதியான குரலில்.



## 16

கவிதா தீர்மானமாய் சொன்னது மட்டுமில்லை.

மனதுள் தெளிவாய் முடிவும் எடுத்திருந்தாள்.

இனி அவள் வாழ்க்கையில் காதல், கல்யாணம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

மனோகரனைக் காதலித்த பாவத்திற்கு, அவள் செய்த தவறுக்கு அதுதான் அவளுக்குச் சரியான தண்டனையும் கூட!

ஆனால் சத்யன் விஷயம்தான் அவளை ரொம்பவும் சலனப்படுத்தியது.

சத்யன் அவளிடம், ''நர்மதா கிடைக்க நீ உதவி செய்ய வேண்டும் கவிதா..'' என்று கெஞ்சி வெளியே அழைத்தான்.

பார்க், பீச் ரெஸ்ட்டாரண்ட்... என அடிக்கடி கவிதாவை அழைத்துச் சன்றான்.

அவன் கூட்டிப் போகும் இடங்களில் எல்லாம் அந்த மாஜி காதலி நர்மதா தற்போதைய தாடிக்கார காதலனுடன் நெருக்கமாய்க் கொஞ்சிக் குலவியபடி இருப்பாள்.

உடனே சத்யன் அதைக் காட்டி கவிதாவிடம் வற்புறுத்து வான். நர்மதா முன் தன் காதலி போல் நடிக்கும்படி கெஞ்சாத குறையாய் கேட்பான்.

கவிதா தவிப்பாள்.

இது என்ன பெரும் வம்பாய் போயிற்று! நினைப்புடன் வேறு வழி தெரியாமல் சத்யனின் விருப்பத்திற்கு தயக்கமாய் சம்மதிப்பாள்.

அதன்பின் சத்யன் அவளை நிஜக் காதலி போலவே பாவிக்க ஆரம்பித்து விடுவான்.

அவளது சிறு இடையை அணைத்துப் பிடிப்பான். விரல்களோடு விரல்கள் விளையாடும். அதுவும் டிஸ்கோ கிளப் என்றால் இடையோடு இடை உரச சின்ன ஆட்டம் வேறு!



அப்படி ஒருமுறை ஆடும் போது கவிதாவின் கன்னத்தோடு கன்னம் வைத்தவன் அப்படியே குனிந்து அவளது செவ்விதழ் களில் முத்தமிடவும் செய்தான்.

திடுக்கிட்டுப் போனாள் கவிதா.

வெகுண்டு கோபமாய் பார்த்தவளுக்கு நர்மதாவைக் காட்டினான் சத்யன்.

அங்கு நர்மதா அந்த தாடிக்காரனுக்கு முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''அவள் கொடுத்தால்.. நாமும் கொடுக்க வேண்டும், கவிதா.. அப்போதுதான் அவளுக்கு பற்றி எரியும்.'' என சத்யனின் உபதேசம் வேறு.

கவிதா ஸ்தம்பிக்கத்தான் செய்தாள்.

நர்மதாவுக்கு பற்றி எரிகிறதோ இல்லையோ அவளுக்கு பற்றி எரிய ஆரம்பித்துவிட்டது.

சத்யன் விளையாட்டுப் போல் நர்மதாவுக்காக அவளை அணைத்தான். காதலி போல் சரசமாடினான். அதனால் நிலை கொள்ளாமல் தவித்தாள் கவிதா.

அவளுள் பழைய நினைவுகள் கிளர்ந்து விட்டு ஆடின. காதல் தவறில்லை. மனோகரனை செலக்ட் செய்ததுதான் மிகப் பெரிய தவறு என்ற எண்ணம் கூட ஒடிந்தது.

அதிலும் அழகும் கம்பீரமுமான சத்யன் மயக்கும் மாயச் சிரிப்புடன் அவளை இழுத்து அணைக்கும் போது, தன்னை மீறி, சுயக் கட்டுப்பாட்டைக் கடந்து அவனிடம் மயங்கத்தான் செய்தாள்.

ஆனாலும் போயும் போயும் நர்மதாவை காதலிக்கிறானே! என்று மருகவும் செய்தாள். தன்னை விரும்பாமல் இன்னொருவனுடன் கூத்தடிக்கும் பெண்ணை இன்னமும் சத்யன் நினைத்துக் கொண்டிருக்கிறானே... இவனை என்னதான் செய்வது? என்ற கோபமும் அவளுள் சிலிர்க்கும்.

மறுகணம், என்ன ஆனால் என்ன? சத்யன் நர்மதாவைக் காதலிக்கிறான், இனி அவன் பாடு நர்மதா பாடு! சமாதானமும் கொள்வாள்.

தன்னை எவ்வித உணர்ச்சியும் பாதித்துவிடக் கூடாது என்பதற்காக அடுத்து வரும் தினங்களில் தன்னை முழுமையாய் அன்பு இல்லம் உருவாக்கும் பணியில் ஈடுபடுத்திக் கொள்வாள்.

தினமும் அன்பு இல்ல கட்டுமானப் பணியை பார்வையிட ஆரம்பித்தாள். பெரிய குளம்தான் தோண்டுகிறார்களோ எனும் படியாக கட்டிட அஸ்திவாரத்திற்காகத் தோண்டிய குழி அவளை ஆச்சரியப்பட வைத்தது.

அஸ்திவாரத்தில் இருந்து கட்டிடம் எழும்பும் பணி ஒவ்வொன்றையும் கூட இருந்து கவனித்தாள்.

நிறைய சமயங்களில் சத்யனும் அவளுக்கு உதவிக்கு வருவான். கறுப்புக் கண்ணாடியும், காட்டன் டீ ஷர்ட்டுமாக அவள் கூடவே இருந்து வேலைகளை சூபர்வைஸ் செய்வான். அவளுக்கு புரியாத விஷயங்களை விளக்குவான்.

காற்றுக்கும் வெளிச்சத்துக்கும் அகல அகலமான ஜன்னல்களுடன், உண்ண, உறங்க படிக்க என ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அறைகளுடன் அன்பு இல்லம் உருவாக ஆரம்பித்தது.



கவிதா முழுமையாய் தன்னை ஈடுபடுத்தி அன்பு இல்ல பொறுப்புகளில் அப்படியே ஐக்கியமாகியும் கொண்டாள்.

அவள் நினைத்தபடியே இரண்டே மாதத்தில் அன்பு இல்லப் பணிகள் எல்லாம் முடிந்து இல்லம் திறக்கப்பட்டது. நூறு ஆதரவற்ற சிறுவ சிறுமியர்களை தத்து எடுத்து அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள் கவிதா.



## 17

மேலும் ஒரு மாதம் ஓடிற்று. அன்று...

கவிதாவிற்கு ஏன் என்று தெரியவில்லை.

எந்த ஒரு காரணமும் இருப்பதாகவும் தோன்றவில்லை. ஆனால் அந்த வார முழுமையும் ஒரு திருப்தியின்மையை கவிதா உணர்ந்தாள்.

உணவு, உறக்கம், வேலை எதிலும் குறை இல்லை. ஆனால் ஏதோ ஒன்று மனதைக் குடைந்து கொண்டே இருந்தது.

காலையில் சத்யன் குட்மார்னிங் சொல்லும்போது, அவனது வழக்கமான புன்முறுவலை எதிர்பார்த்தவளுக்கு அன்று ஏமாற்றம்தான்!

இவனுக்கு என்னாயிற்று?

லேசாக உதட்டை மட்டும் இழுத்துக் காட்டுவதற்கு பெயர் புன்சிரிப்பா?

ஆயினும் அவன் முன் தன் படபடப்பையோ, ஏமாற்றத்தையோ கொஞ்சமும் காட்டி விடக் கூடாது என்பதில் குறியாயிருந்தாள்.

அவளும் அவனைக் கவனித்து விட்டாள்.

இரண்டு நாளாய் அவன் சரியில்லை. பழைய கலகலப்பு அவனிடம் இல்லை.

என்னவாயிருக்கும்?

நர்மதா கவலையா?

நர்மதா புதிதாய் ஏதும் ஸ்டெப் எடுத்திருக்கிறாளா? இவன் மனம் ஒடிந்து போகும் அளவுக்கு அப்படி என்ன செய்திருப்பாள்?

அன்று மாலை கவிதா அடக்கமாட்டாமல் சத்யனிடம் கேட்டே விட்டாள்.

சத்யன், "போயிற்று.." என்றான் விட்டேற்றியாய்.

"போயிற்றா? என்ன சொல்கிறீர்கள்?"

"நர்மதா.. நான் காதலித்த நர்மதா அந்தத் தாடிக்காரனை கட்டிக் கொள்ளப் போகிறாளாம்... கல்யாண தேதி நிச்சயம் செய்துவிட்டார்கள்.."

"நிஜமாகவா?"

"நிஜம்தான்.என்னாலும் நம்ப முடியவில்லை. ஆனால் திருமண பத்திரிகையைப் பார்த்த பிறகு நம்பித்தானே ஆக வேண்டும். நர்மதா இப்படிச் செய்வாள் என கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.."



அவன் தோள்களை குலுக்கி உதடுகளை விளித்து, பெரிய சோகத்திலிருப்பது போல் காட்டிக் கொண்டான்.

கவிதாவிற்கும் என்ன சொல்வதென்று தெரியவில்லை.

அப்படியே இரண்டு நாட்கள் ஓடியது.

சத்யனின் நிலையில் எந்தவொரு மாற்றமும் இல்லை. அதே விரக்தியான மனநிலையில் நர்மதாவையே நினைத்து உருகிக் கொண்டிருப்பது போல் நடமாடிக் கொண்டிருந்தான்.

கவிதாவிற்கு அவனது நிலையைப் பார்க்க சங்கடமாயிருந்தது. கூடவே அவன் நர்மதாவுக்காக ஏங்குவது நினைத்து எரிச்சலாகவும் வந்தது.

அவனது மனநிலையை மாற்ற வேண்டும் என எண்ணிக் கொண்டாள்.

அடிக்கடி வலியப் போய் பேசினாள். மாலை வேளைகளில் அவனுடன் ரெஸ்ட்டாரண்ட், பீச் என அழைத்துச் சென்று நெடுநேரம் அவனுடன் பழக ஆரம்பித்தாள்.

அப்படி ஒரு நாள், கடற்கரையில் பீச் மணலை அலைந்தவாறு சுத்தமான காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தபோது யதேச்சையாய் கேட்டாள்.

"இன்னும் நீங்கள் நர்மதாவை நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?"

கேட்டுவிட்டு ஆவலாய் அவன் முகக் குறிப்பைப் பார்த்தாள்.

"நர்மதாவா.. யார் அது?" சிரிக்க ஆரம்பித்தான் அவன்.

பின் அவள் திகைப்பதைப் பார்த்து, "அவளை இன்னுமா நினைத்துக் கொண்டிருக்கிறேன்? அவளை மறந்து

எவ்வளவோ நாளாகி விட்டது..” என்றவன் விடாது, “இப்போது என்னுடைய கவனம் எல்லாம் என்ன தெரியுமா?” என்றான் பீடிகையுடன்.

“என் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அழகான பெண் மீதுதான்..” சத்யன் விஷயத்தை வேண்டுமென்றே மெல்லிய குரலில் சொன்னான்.

கவிதாவுக்கு காதில் கேட்டும் கேட்காதது போல், “என்ன என்ன சொன்னீர்கள்?” என்றாள் பரபரப்பாய்.

“ஒன்றுமில்லை.. ஒன்றுமில்லை..!” கைகளைத் தட்டிச் சிரித்தவன் அப்படியே பேச்சையும் மாற்றி விட்டான்.

மேலும் மாதங்கள் ஓடியது. இருவரின் பழக்கம் மெல்ல மெல்ல கூடிக் கொண்டு போனது. அடிக்கடி பேசினார்கள். மணிக் கணக்கில் விவாதித்தார்கள்.

அன்பு அனாதை இல்லப் பணிகளில் இருவரும் தீவிரம் காட்டினார்கள். கவிதா ஆதரவற்ற குழந்தைகளையெல்லாம் சேரிகளிலிருந்து தேடிப் பிடித்து, அவர்களை இல்லத்தில் சேர்த்து உறுப்பினர்களை பெருக்கினார்கள்.

சத்யனும் தன் பங்கிற்கு அன்பு இல்லத்திற்கு தேவையான பண உதவிகளை மனமுவந்து செய்தான். அன்பு இல்லத் திலேயே சிறுவர்களுக்கு பள்ளி ஒன்றை ஆரம்பித்து ஆரம்பக் கல்வியை பயிற்றுவிக்க ஏற்பாடும் செய்தான்.

நாட்கள் ஓடியது. நாளுக்கு நாள் சத்யனும் கவிதாவும் அன்பு இல்லப் பணிகளில் மூழ்கி வேறு எதைப் பற்றியும் சிந்திக்காமல் நடந்து கொண்டனர். ரங்கமணி அம்மாள்தான் இருவரது நிலை குறித்தும் பெரும் கவலை கொண்டாள். அவளது வருத்தமும் தீர மறுவாரமே ஒரு சந்தர்ப்பமும் வந்தது.





## 18

அன்று பங்களாவின் பின்புற தோட்டப் பகுதியில் நின்றிருந்த சத்யனைத் தேடிப் போனாள் கவிதா.

மார்பின் குறுக்காய் கைகளைக் கட்டிக் கொண்டு உருக்கி வார்த்த சிலை போல் அசையாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் சத்யன்.

இரவின் மெல்லிய பால் நிலவொளியில் பரந்த மார்பும், திண்கோள்களுமாய் அவன் நின்ற விதம் கிரேக்க சிலை வீரர்களை நினைவுபடுத்தியது.

என்ன ஒரு கம்பீரம் இவனுக்கு!

கவிதா வியந்து பார்த்தது போலவே அவனும் அதிசயித்துப் பார்த்தான்.

அவளது நீளமான கூந்தல் அழகை, தழைய தழைய பின்னி நிறைய பூக்கள் வைத்திருந்ததை, மயக்கும் விழிகளில் லேசாக மை தீட்டி இருந்ததை எல்லாவற்றையும் கவனித்தவன் கடைசியில் அவளது நளினமான உடலமைப்பில் வந்து இறங்கினான்.

இதுவரை எந்தப் பெண்ணிடமும் அவன் பார்த்திராத கச்சிதமான உடலமைப்பு.

அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவள் மெதுவாக நடந்து அவன் அருகில் சென்றாள்.

அவன் அசையாமல் நிற்கவும் மேலும் நெருங்கியவள், ''இனியும் நான் மறைக்க விரும்பவில்லை.. மறைக்கப் போவதில்லை..'' என்றாள் தெளிவான குரலில்.

சத்யனுக்கு ஏதோ புரிந்தது.

ஆனாலும் புரியாதது போல் முகத்தை திகைப்பாக்கிக் கொண்டான்.

''என்ன சொல்கிறாய் நீ?''

கவிதா ஒரு கணம் யோசித்தாள். 'எப்படி அதைச் சொல்வது?' ஒரு கணம் அதை வார்த்தைகளால் வடிப்பது, கொஞ்சமும் கூச்சமில்லாமல் வெளிப்படையாய் அவனிடம் சொல்வதெல்லாம் இயலாத காரியமாய் கூட தோணிற்று.

பூஞ்சிறகாய் படபடத்த மனதை அமைதிப்படுத்திக் கொண்டு யோசித்தாள்.

வார்த்தைகளை விரயம் செய்வதை விட செயலில் காட்டுவது மேல் என அவளுக்கு தோன்றியது போலும்.

மேலும் நெருங்கி அவன் முதுகோடு ஒட்டி நின்று சட்டென கைகளை முன்புறம் செலுத்தி இறுக அவனை அணைத்தாள் கவிதா.

ஒருகணம் இதமான ஸ்பரிசத்தில் சத்யனின் உடல் இரும்பாய் விறைத்தது.

மறுகணம் அவனும் வேகமானான். பதிலுக்கு மாலையாய் அவள் கழுத்தை கட்டி இறுக அணைத்தான்.

ஒருகணம் அந்த இறுக்கத்தில் திக்குமுக்காடிப் போனாள் கவிதா.



மெய்மறந்து காதல் ரசம் பொங்கக் கட்டிப் பிடித்த இருவரும் சற்று மூச்சு வாங்கிக் கொண்ட நேரத்தில், அவள் முகத்தில் தோன்றிய ஆச்சரியத்தைக் கண்டு புன்முறுவலை அதிகமாக்கி யவன், ''இந்த அணைப்பிற்காக எவ்வளவு காலம் ஏங்கி யிருக்கேன் தெரியுமா?'' என்றான் விளக்கம் கொடுப்பது போல்.

''நிஜமாகவா? நீங்கள் கூடவா?'' என வியப்பும் மகிழ்ச்சி யுமாய் கவிதா கேட்ட கேள்வியிலேயே அவள் தன் உள் மனதையும் வெளிப்படுத்திவிட அதை உணர்ந்து இதமாய் முறுவலித்தான் சத்யன்.

வெட்கத்துடன் உதட்டைக் கடித்தபடி அவள் குனிய மெல்ல அவள் முகம் நிமிர்த்தி நெற்றியில் தனது இதழ்களை அவன் பதித்தான். அந்த பரவசத்தில் இருந்த ஆனந்தத்தை உணர்ந்து கவிதா மனம் பூரித்தாள்.

இந்த அன்பை எவ்வளவு காலமாக அவள் புரிந்து கொள்ளாமலே இருந்திருக்கிறாள்?

நினைத்த உடனே எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும், அவளை தொற்றிக் கொண்டது. சட்டென விலகி நின்று நாணமானவள், ''எப்போதிருந்து என்று சொல்லுங்களேன்..'' என்றாள் மென் குரலில் வெட்கம் பொங்க.

அவளது ஆவல் புரிந்தாற்போல் உடனே ஒப்புக் கொண்டான் சத்யன். ஆனால் விலகியவளை மறுபடி இழுத்து தன் கரங்களுக்குள் சிறையிட்டு நெஞ்சோடு சாய்த்தான்.

''நான் சொல்வதை.. நீ இப்படி.. இப்படி இருந்துதான் கேட்க வேண்டும், புரிகிறதா?''

அவள் முகம் சிவக்க தலையாட்டினாள், சிறைப்பட்டிருந்த அவளது விரல்களை மெல்ல வருடியபடி சற்று நேரம் மவுனித்தவன் தொடர்ந்து பேச ஆரம்பித்தான்.

''கவிதா, உனக்குச் சொன்னால் ஆச்சரியமாயிருக்கும். ஆனால் உண்மை அதுதான். உன்னைப் பார்த்ததும், உன்னை விழிக்கு விழி நோக்கியதும் அப்படியே விழுந்து விட்டேன். அதே சமாச்சாரம்தான்! கண்டதும் காதல்தான்!''

''நிஜமாகவா?''

நம்ப முடியாமல் அவள் விழிகளை அகல விரிப்பதை பார்த்து அதிசயித்தவன், ''என்னால் நம்ப முடியவில்லை. கண்டதும் காதல் கொள்கிற அளவுக்கு அவ்வளவு பலஹீன மானவனா? என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். அப்போது ஒரு உண்மை புரிந்தது..''

''அது.. என்ன உண்மையோ?'' பொங்கி வந்த சிரிப்பை அடக்கியபடி அவள் கேட்டாள்.

''நிஜமான அன்பிற்கு என் உள்ளம் ஏங்கிக் கொண்டிருந்தது புரிந்தது. நான் எதிர்பார்க்கும் அந்த தூய்மையான அன்பு உன் மூலம்தான் கிடைக்க முடியும் என்பதையும் அறிந்து கொண்டேன்..''

''நல்ல முயற்சி.. அப்படியானால் நர்மதா?''

''நர்மதா..? ந...ர்...ம..தா..?''

திரும்பவும் அந்தப் பெயரை உச்சரித்துவிட்டு அடக்க முடியாமல் அவன் சிரித்தது அவளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

''நர்மதா..? நர்மதாவுக்கென்ன..?'' என்று அவன் கேட்ட போது அவள் வியப்பின் உச்சிக்கே சென்றாள்.

''நர்மதா உங்கள் காதலி அவளை நீங்கள் மறக்க முடியாமல்.. தவித்து.. வருந்தி...''

அவள் வார்த்தைகளை முடிப்பதற்குள் அவனது சிரிப்பலை பெரிதாகியது.




''நர்மதா காதலிதான்! ஆனால் எனக்கல்ல. அந்தத் தாடிக்கார இளைஞனுக்கு! அவனது காதலி அவள்..!''

''அப்.. அப்படியானால் அ.. அவளை.. நீங்கள் காதலிக்க வி..ல்..லை.. யா?''

திக்கித் திணறி அவள் கேட்க சத்யன் சீரியஸான முகத்துடன் அவரைப் பார்த்தான்.

''நான் ஏன் நர்மதாவை காதலிக்க வேண்டும்? நான்தான் உன்னைக் காதலிக்கிறேனே?''

புரியாமல் காது மடல்கள் அதிர சிலிர்த்தவளை அமைதியாக அணைத்து கனிவாக அவள் தலையை மெல்ல வருடியவன், ''உன் அழகான முகம் என்னமாய் அதிர்கிறது..? கண்மணி, இன்னும் புரியவில்லை! நர்மதா.. காதலி... எல்லாம் நாடகம்! உன்னைக் காதலிக்க நான் போட்டுக் கொண்ட வேஷம்!'' என்றான் சத்யன் அமைதியாக.



## 19

''என்ன வேஷமா?''

மறுபடியும் அவள் சிலிர்த்து வியந்ததை புருவம் விரிய பார்த்தவள், ''எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்லட்டுமா? உன்னைக் கண்டதுமே எனக்குக் காதல் ஏற்பட்டு விட்டது. ஆனால் நீ.. நீ.. அப்போது எந்த, மனநிலையில் இருந்தாய்? கொஞ்சம் யோசித்துப் பார்... மனோகரனை நம்பி ஏமாந்த

நிலையில் காதல் என்றாலே வேப்பங்காயாய் கசப்பது போல் அதை ஒரேயடியாய் வெறுத்து இனி நம் வாழ்வில் காதல் கல்யாணம் என்ற ஒன்றே வரக் கூடாது.. என்றல்லவா முடிவெடுத்திருந்தாய்.."

"ஆமாமாம்.. அதில் சந்தேகமென்ன?" என சிணுங்கியவளின் மூக்கைப் பிடித்துச் செல்லமாய் திருகியவன், "பின் எப்படி நான் உன்னிடம் என் காதலை வெளிப்படுத்த முடியும்? அதனாலே யோசித்தேன். காதலைப் பற்றிய உன்னுடைய மனநிலையை மாற்றி உன் மனதில் இடம் பிடிக்க எண்ணினேன். அந்த தாடிக்கார இளைஞன் என்னுடைய நண்பன் கிரிதர். அது அவனுடைய உண்மையான காதலி நர்மதா. இருவரிடமும் என் திட்டத்தை கூறி உன் முன் நடிக்கும்படி சொல்ல.. இருவரும் சந்தோஷமாய் ஒப்புக் கொண்டார்கள். அதனாலே.."

அவசரமாய் இடைமறித்தவள், "அந்த நர்மதாவுக்கு வெறுப்பேற்றுவது போல் நம்ப வைத்து... என்னை அணைத்து என்னிடம் காதல் செய்து.. வெறுப்பேற்றினீர்களாக்கும்?"

வெகுண்டு முகம் சிவக்க கேட்டவளின் விழிகளை ஊடுருவி விட்டு, மெல்ல இழுத்து அணைத்தவன் அவளது இதழ்களில் மென்மையான முத்திரை ஒன்றை பதித்து கோபத்தையும் அடக்கினான்.

"எனக்கு வேறு வழி இல்லையே கண்மணி..." சிணுங்கலான அவள் முகத்தைப் பார்த்துச் சொன்னவன், "சரி உன் நிலை எப்படி? அதைச் சொல்லு.." என்றான் ஆர்வம் பொங்க. ஆனாலும் அவள் சீற்றம் தணியாதவளாய், "அப்படியானால் அம்மா, உங்கள் தாயாரும் நீங்களும் நர்மதாவைக் காதலிப்பதாய் சொன்னது.." என்றாள்.



"அதுவும் பொய்தான்...! உன்னை நம்ப வைக்க நான் செய்த நாடகம்தானே? அம்மாவிற்கு இந்த நாடகம் சுத்தமாய் பிடிக்கவில்லை. நான்தான் வற்புறுத்தி நடிக்க வைத்தேன். எனக்காக அவர்களையும் மன்னித்துவிடு.."

சொல்லிவிட்டு அவன் அமைதியாக அவளும் அமைதியானாள்.

கொஞ்ச நேரம் மௌனமாய் கழிந்தது.

அவள் முகத்தையே உற்றுப் பார்த்த சத்யன், "என்ன கண்மணி, கோபமா?" என்றான் துணுக்குற்ற குரலில்.

ஒருகணம் உதடுகளை இறுக்கமாக்கி கோபம் அடங்காதவள் போல் அவனை நினைக்க வைத்தவள் மறுகணமே கலகலவென நகைத்து அவன் திகைப்பை போக்கினாள். "நினைத்துப் பார்த்தேன். நீங்கள் நர்மதாவை வெறுப்பேற்றுவது போல் என்னை அணைத்துப் பிடித்து - என்னுள் காதலை அரும்ப விட்டதை எல்லாம்.."

மேற்கொண்டு சொல்லாமல் கவிதா நாணமுறச் சிரிக்க... அவள் சிரிப்பதை ஆசையுடன் பார்த்திருந்துவிட்டு, "இனி உன் முறை.. ம்...ம். சொல்லு." என்றபடி ஆவலானான் சத்யன்.

"அது.. அது.. காதல் கூடாது என மனதுள் வெறுத்து ஒதுங்கிய விஷயம்தான்.. ஆனால் உங்களது நடவடிக்கை, என் மீது நீங்கள் கொண்ட ஆளுமை எல்லாம் என்னை சலனப்படுத்திவிட்டது. கட்டுப்பாட்டை மீறி என் மனம் எப்போதோ காதலிக்க ஆரம்பித்துவிட்டது..." முகம் சிவக்க சொல்லியவள் மறுபடியும் நாணமுற்று அவன் கைகளில் முழுவதுமாய் தன்னை சிறையிட்டுக் கொண்டாள்.

"அப்புறம் இன்னொரு விஷயம் கண்மணி. சொன்னால் உனக்கு ஆச்சரியமாயிருக்கும். உன் தந்தை பற்றி.."

''தந்தை பற்றியா? சீக்கிரமாகச் சொல்லுங்கள்..''

நிமிர்ந்து துடிப்பாய் பரபரத்தவளை அணைத்து அமைதிப் படுத்தியவன் சிரித்தவாறே, ''உன் தந்தைக்கும் தங்கைக்கும் நீ என்னுடன் இருப்பது தெரியும்..'' என்றான் அவளை அதிர வைத்தவாறு.

''என்ன தெரியுமா?''

மின்னலாய் அதிர்ந்தவளை புன்சிரிப்பு மாறாமல் பார்த்தவன், ''உன் தந்தை தில்லைநாதர் என்னுடைய பழைய தமிழாசிரியர். அவரது பிரியமான மாணாக்கன் நான்! நீ உன்னுடைய ஊரையும் தந்தையின் பெயரையும் சொல்லியதுமே எல்லாவற்றையும் புரிந்து கொண்டேன். மேலும் நான் பள்ளிப் படிப்பு முழுவதும் அவரது அன்பான அரவணைப்பில்தான் படித்தேன்..''

''அப்படியா?''

''அது மட்டுமல்ல. நீ அவருடைய மகள்.. உன்னை காணாமல் அவர் தவிக்கக் கூடும் என்ற நிலைமையை உணர்ந்து நேரிலே அவரிடம் சென்று பேசினேன். நீ இங்கு எங்களுடன் பத்திரமாக அனாதை ஆசிரமம் ஒன்றை அமைக்கும் பணியில் இருப்பதை தெரிவித்தும் இருந்தேன்..''

''அப்படியா?''

கவிதாவால் கொஞ்சமும் நம்ப முடியவில்லை. உடம்பு முழுவதும் அதிசயமான மயிர்க் கூச்சரிப்பு பொங்க அவனைப் பார்த்தாள்.

''நம்பு, கவிதா. நான் உன்னை அழைத்து வந்த மறுநாள் பிஸினஸ் டூர் என்று சொல்லிவிட்டு இரண்டு நாள் போய் வந்தேனே.. அது வேறு எங்கு என்று நினைத்தாய்? உன் ஊருக்கு..! உன் தந்தையைப் பார்க்கத்தான்! பார்த்துப்.. பேசி... அவரை சமாதானமும் செய்தேன், தெரியுமா?''



''த.. தந்தை.. என்ன சொன்னார்?''

ஒருகணம் பேச்சை நிறுத்தி விழிகள் விரிய நின்று அவளது படபடப்பை ரசித்தவன், ''வேறென்ன? முதலில் உன் மீது ரொம்பவும் கோபப்பட்டார். நிலைமையை விளக்கி அவருக்கு புரிய வைத்தேன். என்னைப் பற்றியும் என் குடும்பம் பற்றியும் அவருக்கு எப்போதும் நல்ல அபிப்பிராயம் உண்டு. அதனாலே தன் மகளை எப்படியும் நல்லபடியாக உருவாக்கி விடுவார்கள் என்ற நம்பிக்கையும் அவருக்கு வந்துவிட்டது. அவள் இஷ்டம் போல் செய்யுங்கள்..'' என அனுமதி அளித்துவிட்டார்.

அவன் சொல்லச் சொல்ல... கண்களில் தாரை தாரையாய் நீர் பெருகி வழிய மருகிக் கொண்டிருந்தாள் அவள்.

''ஹேய், என்ன இது..!'' என அவன் உலுக்கி ஆறுதல் படுத்த ஆற்றாமையாமல் கதறினாள் அவள்.

''என்.. தந்தை.. எவ்வளவு நல்லவர்? அவரை நான் ஏமாற்றி விட்டேன்.. என்... என்.. மீது.. எவ்வளவு பாசம் வைத்திருந்தார்.. அவர்! அவரை.. ஏமாற்றி.. அவரிடம் சொல்லாமல் கொள் ளாமல்.. ஓடி.. வந்து..''

மேலும் கதற விடாமல் தன்னோடு அவளை இறுக்கியவன், ''ச்சு... அதெல்லாம் பழம் கதை. விடு எல்லாம் தாண்டி யாயிற்று... இனி புதுக் கதை சொல்லட்டுமா?'' என்றான் அவள் சிவந்த முகத்தை நிமிர்த்தியவாறு.

அவள் புரியாமல் பரபரப்புடனே அவனது முகத்தை ஆர்வமாய் பார்த்தாள்.

''நாளை நம் அன்பு இல்லத்தில் மாணவ மாணவியர் களுக்கான கலை நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்திருக்கிறோம்

அல்லவா... அதில் முக்கிய வி.ஐ.பி.யாக கலந்து கொள்ளப் போவது யார் தெரியுமா?"

அவன் நிறுத்தி அவளைக் கூர்ந்து கவனித்து விட்டு நிதானமாய் வார்த்தைகளை உச்சரித்தான்.

"உன் தந்தை தில்லைநாதர்..! அவர்தான் சீஃப் கெஸ்ட். நம்முடன் விழாவில் கலந்து கொள்ளப் போகிறார் போதுமா?

அவரிடம் எல்லாம் போனில் பேசியாயிற்று. உன்னை மனப்பூர்வமாய் மன்னித்துவிட்டார். இனி நீ எடுக்கும் எந்த முடிவும் அவருக்கு சம்மதம்தானாம். அன்பு இல்லம் உருவாக்க.. நீ பட்ட சிரமம் அவரை நெகிழ வைத்து விட்டதாம்..."

அவன் சொல்லச் சொல்ல கவிதாவின் மலர்ந்த விழிகளில் ஆனந்தக் கண்ணீர் புரண்டோடியது. அவனது கரங்களில் அப்படியே துவண்டாள்.. அவள்.

துவண்டவளை அப்படியே தன்னோடு இறுக்கியணைத்து ஆறுதல் படுத்தியவன், "அடுத்து உன் தந்தையிடம் நம் காதலை தெரிவித்து கல்யாண தினத்தை உறுதி செய்ய வேண்டியதுதான்.." என்று கூறி அவளை மேலும் முகம் சிவக்க வைத்தான்.

அவனது அணைப்பில் கட்டுண்டு தன் வசமிழந்தவளாய் வெட்கம் படர கண்களை மூடிக் கொண்டாள் கவிதா.

★

26573